# தமிழ்ப் பொழில்

**தமிழாராய்ச்சித் திங்களிதழ்**

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

துணர் : 60 மலர் : 8

## உள்ளுறை


1. அனைத்து இந்தியத் தமிழ்ச் சங்கங்களின் ஒருங்கிணைந்த கூட்டமைப்பு .... 337

ச. இராமநாதன்
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. புதிய கல்விக் கொள்கையா ? புதிய ஒதுக்கற் கொள்கையா ? ... 339

டாக்டர் வ. சுப. மாணிக்கம், பி. எச்டி. டி. லிட்.
முன்னாள் துணைவேந்தர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
தலைவர் காரைக்குடித் தமிழ்ச் சங்கம்.

3. சுந்தரரின் பக்திக் கோட்பாடுகள் ... 350

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
ப. குமரன், ஆய்வாளர்,
தமிழ்மொழித்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை - 5.

4. கதையாசிரியர்களும் உத்திகளும் .... 355

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
பேராசிரியர் இரா. சண்முகவேலன்,
தமிழ்த்துறை,
அ. வீ. வா. நி. புட்பம்கல்லூரி,
பூண்டி.

5. தொல்காப்பியம் செய்யுளியல் காண்டிகையுரை ... 361

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

6. புறத்திணைத்துறைப் பாகுபாடும் சமூகப் பின்னணியும் .... 377

பெ. மாதையன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2017

துணர்: 60 அட்சய — கார்த்திகை மலர்: 8

நவம்பர் — டிசம்பர் 1986

## அனைத்து இந்தியத் தமிழ்ச்சங்கங்களின் ஒருங்கிணைந்த கூட்டமைப்பு

கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் ச. இராமநாதன்

1. உலகத்தில் பல்வேறு பகுதிகளில் வாழ்கின்ற தமிழின மக்களின் நல்வாழ்விற்கு ஏற்ற சூழ்நிலையை அமைத்துத் தருதல்.
2. தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்தல்.

3. தமிழ்நாட்டில் உள்ள மக்கள் முழுமையாகத் தமிழிலேயே கல்வி பயின்று தமது வாழ்க்கையில் தொழில்துறை, வேலை வாய்ப்பு, பொருளாதார நிலை, அரசு அலுவல்கள் விஞ்ஞானத் துறை மற்றும் ஏனைய துறைகளிலும் ஏற்றம் பெற வகை செய்தல்.

4. தமிழின மக்களுக்கு மத்திய அரசு அலுவலகங்களில் வேலை வாய்ப்பிலும் பொது தேர்வாணைக் குழுவிலும் ஐ. ஏ. எஸ். மற்றும் ஐ. பி. எஸ். போன்ற தேர்வுகளைத் தமிழிலேயே நடைபெறச் செய்து தேர்ந்தெடுக்க வைத்தல்.

5. தமிழின மக்களின் பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றைப் போற்றி வளர்த்தல்.

6. தமிழ்ப் பேறிஞர்களுடைய நூல்களை வெளியிட்டுப் பேணிக் காத்தல்.

7. உலகத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கனின் இருப்பிடத்தில் தமிழ்ச் சங்கம் தோற்றுவித்து உரிமைகளைப் பாதுகாத்து தமிழை வளர்த்தல்.

8. இந்தியாவின் ஒருமைப்பாட்டைப் பேணிக்காக்க அந்தந்த மாநிலங்களில் வாழ்கின்ற மக்களின் தாய்மொழியிலேயே ஆட்சி நடைபெறச்செய்யவும் அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படவும், ஆவன செய்தல்.

9. தமிழ் மக்களின் பல்வேறு உரிமைகளைப் பாதுகாக்கப் பல்வேறு இடங்களிலும் பல்வேறு நிலைகளிலும் கூட்டங் களையும், மாநாடுகளையும் அவ்வப்போது நடத்திச் செயல் படுத்துதல்.

10. பல்வேறு துறைகளில் பணியாற்றும் தமிழ் வல்லுநர்களை அழைத்துக் கருத்தரங்கு நடத்தித் தமிழ்மொழி ஏற்றம்பெற ஆவன செய்தல்.

11. மத்திய அரசு அலுவலகங்கள் பொதுமக்களிடம் தொடர்பு கொள்கிறபோது, படிவங்கள் அனைத்தும் அந்த மாநிலங் களில் மொழிகளிலேயே அமைதல் வேண்டும்.

குறிப்பு :

கூட்டமைப்பு அமைப்புதற்காக மேற்கூறிய இக்கருத்துக் களோடு தொடர்புடைய, தங்கள் கருத்துக்களையும் தருதல் நலம்.

# புதிய கல்விக் கொள்கையா ?
# புதிய ஒதுக்கற் கொள்கையா ?

டாக்டர் வ சுப. மாணிக்கம், பி. எச்டி. டி லிட்.
முன்னாள் துணைவேந்தர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
தலைவர் காரைக்குடித் தமிழ்ச் சங்கம்

'கேடில் விழுச் செல்வம்[1] கல்வி' என்ற திருக்குறட்படி நாட்டுக்கும் தனி மனிதனுக்கும் நன்மை வளரும்படியும் கேடு வாராதபடியும் கல்வி முறைகளை அடிக்கடி சீர்தூக்கிச் செப்பஞ் செய்தல் இன்றியமையாதது. கற்கவேண்டிய துறைக் கூறுகள், கற்பிக்கும் முறைகள், கல்விக் காரணங்கள், ஆசிரியத் தகுதிகள் இன்னவற்றில் புது நாட்டம் வேண்டும். உள்ளவற்றைக் கொண்டு காலத்தை ஓட்டிவிடலாம் என்ற மடிமை கல்வியுலகிற்படியுமேல், பாரதநாட்டின் வளர்ச்சி பலதுறையிலும் மடங்குவதோடு, உலகப் பார்வையில் பிற்போக்கு என்ற அவச் சொல்லும் நமக்கு ஏற்படும். புத்தம் புதிய நன்மைகளை உடனுக்குடன் தழுவிக் கொள்ளாவிடில், பிறநாட்டார் கண்ட அறிவு வேகப் புதுமைகள் நமக்கு வரும்போது திறனற்ற பழமையாகிவிடும் விரைந்தோடும் ஞாலமாற்றத்தில் நாம் இமையாக் கண்ணர்களாக விழித்திருக்க வேண்டும்.

## புதுத்திட்டத்தின் ஆராக்காதல்

மையவரசு அண்மையில் வெளியிட்ட புதிய கல்விக்கொள்கை முந்திய கல்விக்குழுக்களின் விரிந்த அறிக்கைகளைச் செவ்வனம் ஆராய்ந்து இன்றைய கேடுகளையும் எதிர்கால ஆக்கத்தையும் எண்ணிப் பார்த்துச் சில பாங்குகளில் புதிய வழிகளைக் காட்டு கின்றது. இப்புதுத் திட்டம் துடிப்பும் வேகமும் கொண்டது; குறை களுக்கு அமைதி கூறாமல் நிறைவும் செம்மையுங் காண முற்படுவது. வளர்ந்த நாடுகளுக்கு நிகராக நுண்ணறிவிலும் தொழில்நுட்பத் திலும் கல்வியேற்றத்திலும் சிறந்தோங்க வேண்டும் என்ற ஆராக் காதல் உடையது இத்திட்டம். சில பெரு நகரங்களிலோ சில பெருமக்களிடத்தோ அறிவு நுண்வளம் பரவினாற் போதாது ; கிராமப் பகுதிக்கும் கிராம மக்கட்கும் புதிய கல்விச் செழிப்புப் பாய வேண்டும் என்ற அன்புத் துடிப்பையும் இத்திட்டத்தில் உணர் கின்றோம். "இளைய பாரதத்தினாய் வாவாவா : எதிரிலா வளத் தினாய் வாவாவா'' என்ற பாரதக்கவியின் குரலை இத்திட்டத்திற் கேட்கலாம்.

## புதுக்கொள்கையின் சிறப்புக்கள்

தொடக்கப்பள்ளி முதல் கல்லூரி பல்கலைக்கழகம் வரை மாற்றத்துக்கும் வளர்வுக்கும் வேண்டிய திருத்தக் குறிப்புக்கள் இப்புதுத்திட்டத்தில் உள. கல்வி நோக்கங்கள், சமம், தரம், பொருத்தம், நாட்டொருமைப்பாடு, கட்டாயக் கல்வி, முதியோர் கல்வி, தொழிற்கல்வி, அஞ்சல்வழிக் கல்வி, விடுதலை வரலாறு, திறமை வாய்ப்பு, சமுதாய நோக்கம், மனிதவள வெளிப்பாடு, பாடத்திட்டங்கள், பாடப் பொதுக்கூறுகள், தரமான கல்வி, தேர்வொழுங்கு, ஆசிரியத் தகுதி, ஆசிரியப் பயிற்சி, பணிப் பொறுப்பு, தன்னாட்சிக் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகச் சூழல், பணியோடு பட்டத் தொடர்பின்மை, கல்வி மேலாண்மை, விரிந்த பலவகைத்துறைகள் என இன்னவாறு ஏராளமான கல்விக் கூறுகளை இக்கொள்கையிற் காண்கின்றோம்.

கல்வியின் தரத்தைப் பெருக்குவதற்குத் தொலைக்காட்சி, கணிப்பான், வானொலி, ஆய்வுக்கூடங்கள், புதியசோதனைக் கருவிகள் கரணங்கள் எல்லாம் திறம்பட அமைப்பதையும் இத் திட்டம் வலியுறுத்தும். புதுக் கல்வித் திட்டத்தின் அனைத்தையும் சுட்டிக் காட்டுவது இக்கட்டுரையின் கருத்தன்று இராதா கிருட்டிணன கோத்தாரி முதலியார் இனைய பெருமக்கள் தந்த கல்வியறிக்கைகளினும் கூடுதலான வளர்ச்சிக் கூறுகளும் அறிவியல் வேகப்பார்வையும் இதில் உள என்பதனை யாவரும் பாராட்டுவர்.

## செயற்குறைபாடுகள்:

எத்திட்டங்களும் கொள்கை நோக்கங்கள் அளவில் குறை பட்டனவாக இரா. உயர்வுள்ளலாகவே இருக்கும். நடைமுறை யாட்சியும் செயல் வடிவமும் பெறும்போதுதான் குறைகள் தோன்றி விடுகின்றன ; நோக்கமும் செயற்பாடும் விட்டுக் காட்டுகின்றன. நன்னோக்கங்கள் பல கொண்டிருப்பினும்,புதிய கல்வித் திட்டத்தின் செயற்பாதைகள் குறுகலாகவும் மறுகலாகவும் செல்கின்றன. இன்று பலரும் கருத்துரைக்கும் ஒரு கொள்கை நவோதயப் பள்ளி என்னும் மாதிரிப்பள்ளி பற்றியதாகும். மொழிநிலையில் ஒரு சில மாற்றங்கள் செய்து இத்திட்டத்தை ஏற்கலாம் என்று கருத்திணக்கம் காட்டு வாரும் உண்டு.

·முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்

என்ற வள்ளுவப்படி, நாட்டொருமைப்பாடு, தரமான மிகுதிறமைக்கு வாய்ப்பு, கிராம முன்னேற்றம், பாடத்திட்டம், புதுநுண்கருவிகள் முதலியவற்றை எண்ணிப் பார்த்தால், இவற்றுக்காக மாவட்டந் தோறும் மாதிரித் தனிப்பள்ளி ஒன்று வேண்டுமா ? போதுமா ? பாரதமுழுதும் 450 மாவட்டங்களில் 450 மாதிரிப்பள்ளிகளை நிறுவிவிட்டால் புதுக்கல்விக்கோள்கள் பாரதத்தைப் புதுப்பித்து விடுமா ? ஏறக்குறைய அறுபதினாயிரம் உயர்நிலைப்பள்ளி மேனிலைப்பள்ளி இருக்கும்போது, ஒருமைப்பாடு, திறமைவாய்ப்பு, கல்வித்தரம் பட்டிதொட்டி முன்னேற்றங்களை அப்பள்ளிகளின் மூலம் செயற்படுத்தலாமே. இங்கு கற்கும் இலட்சக் கணக்கான மாணவர்கட்கும் இவை வேண்டியவையல்லவா? நவோதயத் தொடக்கப் பள்ளி, நவோதயக்கல்லூரி, நவோதய பல்கலைக் கழகம் என்றெல்லாம் கொண்டுவராமல் 6 முதல் 12 வகுப்புக்கு மட்டும் தனிமாதிரிப்பள்ளிகள் 500 கோடி செலவில் நிறுவவேண்டுமா ? விரும்பும் நல்ல கல்விச் சீர்திருத்தங்களை ஏற்கனவே நடைபெறும் பள்ளிகளின் வழியும் காணவியலும்போது, புறம்பாக முழுச் சலுகைகள் கொண்ட மாதிரிப் பள்ளிகள் அமைப்பது என்பது செய்கைக் குறைவாகும் ஒரு சில நூறு குழந்தைகளைப் பொறுக்கி யெடுத்து அவர்கட்கென மாதிரிப்பள்ளி நிறுவிப் பலகோடி செலவழிப்பது கடலில் கரைத்த புளியாகும்.

நவோதயப் பள்ளித் திட்டத்தால் நலம் பெரிதா, தீது பெரிதா என்று எதிர்கால விளைவைச் சிந்தித்தால், முப்பெருந்தீய விளைவுகள் மாணவர்கட்கும் சமுதாயத்திற்கும் இந்திய மொழி கட்கும் உண்டாகும் என்பது என் கவலை. ஆதலின் புதிய கல்விக் கொள்கையில் மாவட்டந்தோறும் மாதிரிப் பள்ளி தொடங்கும் ஒரு முனைப்பைக் கைவிடுக என்பது என் வேண்டுகோள். இவ் விளைவு களைச் சுருக்கமாகச் சொல்வேன்.

## இருவருக்கம் ஏற்படல்

தேசிய ஒருமைப்பாடு, தரமான கல்வி, மிகுதிறமைக்கு வாய்ப்பு என்பன மாதிரிப்பள்யின் முக்கிய நோக்கங்களிற் சில இதிற் சேரும் மாணவர் எல்லார்க்கும் எல்லாம் இலவசம் என்பது மிகப்பெரிய கவர்ச்சிச் சலுகை.

தேசவொருமைப்பாட்டுணர்வு சிறிய பெரிய எல்லாக் கல்வி நிறுவனங்கட்டும் உரிய பொதுவியல்பு. நாட்டுப்பாடலை எல்லா நிலையங்களும் இசைக்கின்றன. எனினும் தேசவொருமையை வளர்த்தல் மாதிரிப்பள்ளியின் கொள்கையாக, முதன்மைக்

கோட்பாடாக விளம்பரப்படுத்தப்பட்டிருக்கின்றது. இதன் விளைவென்ன? இப்பள்ளி மாணவர்கள் தாம் தேசியவொருமையுணர்வில் வளர்க்கப்பட்டவர்கள், வளர்ந்தவர்கள் என்ற ஒரு மதிப்பு சமுதாயத்திலும் நாட்டிலும் ஆட்சியிலும் இயல்பாகப் பரவிவிடும். மையவரசின் திட்டமாதலாலும், மையவரசின் முழுச் சலுகையால் நடப்பதாலும், பிற மாநில மாணவர்களோடு உறவு கொள்வதாலும், இந்தி கற்பதாலும் இப்பள்ளி மாணவர்கள் மையவரசின் நேர் குடிகளாகவும் மையவரசின் வேலைவாய்ப்புக்கட்குத் தக்கவர்களாகவும் கருதப்படுவர். அங்ஙனம் முன்னுரிமையுடையவர்களாக வளரும் ஆணவம் அம்மாணவர்கட்கும் தோன்றும். மையவரசின், உள்நாட்டு பணிகட்கும் வெளிநாட்டுப் பணிகட்கும் மாதிரிப்பள்ளி மாணவர்களின் விண்ணப்பங்களும் அப்பள்ளியாசிரியர்களின் விண்ணப்பங்களுமே செல்வாக்குப் பெறும்.

ஏனைய மாநிலப்பள்ளிகளிற் பயிலும் கோடிக்கணக்கான மாணவர்கள் அத்துணைத் தேசியவுணர்விலிகளாகவும் திறமையும் கல்வித்தரமும் குறைந்தோராகவும் மாநிலச் சிறுபதவிகட்கே தக்கவர்களாகவும், இன்னும் சொல்லப்போனால், தாய்மொழியிற் கற்றதனால் இரண்டாந்தரக் குடிகளாகவும் குறுகிய மாநிலப் பற்றுடையவர்களாகவும் ஒதுக்கப்படுவர் ; தாழ்த்தப்படுவர். மையவரசின் மாதிரிப்பள்ளி நிறுவப்படுமேல், விரிந்த நோக்குடைய தேசிய மாணவர்கள் எனவும் குறுகிய பார்வையுடைய மாநில மாணவர்கள் எனவும் இருவகைப் புதிய வருக்கம் அல்லது பிளவினம் வன்மையாக எழுந்துவிடும். ஒருமைப்பாட்டுக்கு எதிராக இருமைப்பாடும் பன்மைப்பாடும் கிளர்ந்து விடும். பத்துப் பதினொரு வயதுக் குழந்தைகள் நிலையிலேயே மேல்கீழ் என்ற உணர்வும் ஆதிக்கம் அடிமை என்ற உணர்வும் எழச் செய்தல் அறிவன்று ; ஒருமைக்கு உரமன்று.

தேசியம் எப்பருவத்தினர்க்கும் எந்நிலையினர்க்கும் பொது. மாதிரிப்பள்ளி ஒன்றுக்கு மாத்திரம் குறிக்கோளன்று. தேசியத்தை வைத்துக்காட்டி இலாபம் பெறும் போக்கு நாட்டுக்குப் பெருங் கேட்டிற் போய் முடியும். ஆதலின் மாதிரிப்பள்ளி வேண்டுமா என்பதனைச் சிந்தியுங்கள்.

## திறமைப் பாகுபாடு

கிராமப் பகுதிகளில் வாழும் மிகுதிறமான ஏழைக் குழந்தைகட்குத் தரமான கல்வி இலவசமாக வழங்குவது என்பது மாதிரிப் பள்ளியின் மற்றொரு நோக்கம். நோக்கத்திற் குறையேயில்லை. 'வண்மையில்லை ஓர் வறுமையின்மையால்' என்று கம்பர் பாடவில்லையா ? செயல்முறை எப்படி ?

மாதிரிப் பள்ளியில் ஆறாவது வகுப்பில் 80 பேர் சேர்க்கப் படுவர். இவருள் 16 பேர் வெளிநில மாணவர். ஒரு மாவட்டத்தி லிருந்து 64 பேரை நுழைவுத்தேர்வு வைத்துப் பொறுக்க வேண்டும். ஒரு மாவட்டத்தில் கிராமப்பகுதிகளில் ஐந்தாவது வகுப்பில் 10000 பிள்ளைகளாவது படிப்பர். எது கிராமம் எது நகரம் என்பதில் பூசல்கள் வருமே பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்பது போன்ற கிளர்ச்சி இதிலும் தோன்றும். எல்லாம் இலவச மல்லவா?

கிராமக்குழந்தைகளின் திறமைகளைத் தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுகளின் அடிப்படையில் காணமுடியுமா? நுழைவுத்தேர்வு வைத்தால் இதற்குத் தேர்வுப் பயிற்சிப்பள்ளிகளும் கையேடுகளும் கலைபோல் பெருகவே செய்யும். எல்லாம் இலவசம் என்பதனால் ஆயிரக்கணக்கான குழந்தைகள் போட்டியிற் கலந்து கொள்வர். பத்துப்பதினொரு வயதுடைய குழந்தைப்பருவத்து இப்படி ஒரு தேர்வு வேண்டுமா? இந்த 64 மாணவர்தாம் மிக்கவாற்ற லுடையோர் என்று பிரித்தெடுப்பதும் ஏனைய ஆயிரக்கணக்கான குழந்தைகளைத் திறம் இல்லாதார்போல ஒதுக்குவதும் செய்தால், கிராமச் சமுதாயச் சூழ்நிலைகளில் எவ்வளவோ ஏற்றத் தாழ்வுகள், சிக்கல்கள், புதிய சாதிகள் போலப் புகுந்துவிடும்.

அடிப்படை மட்டத்தில் பெரும்பான்மையோரை மேம்படுத்தும் பெருநோக்கு இருந்தால்தான், கிராமப் பகுதிகள் பரவலான தரமான கல்வி வளர்ச்சியைப் பெறும். அவர்கட்குத்தான் திறமை மேலும் வளர்தற்கு வேண்டும் சமவாய்ப்புகளை வழங்கவேண்டும். புதிய கல்விக் கொள்கையில் கிராமப்புற நோக்கம் நன்று. அது திட்டுத் திட்டான வளர்ச்சியாகக் குறுகாமல், ஒட்டுமொத்தமான சராசரிப் பெருவளர்ச்சியாதல் வேண்டும். மாதிரிப்பள்ளிகட்குரிய 500 கோடித்தொகையை இன்னும் கூடுதலாகக்கூட முன்னரே நடந்து வரும் கிராமப்பள்ளிகளின் பொதுத்தரம் உயரச் செலவிடலாம்.

## வேண்டா ஒதுக்கம் :

மிகச்சிலரைத் திறமுடையோர் எனவும் மிகப்பெரும் பலரைத் திறங்குறைந்தோர் எனவும் கிராமக் குழந்தையுலகில் வகைப்படுத்தி ஏற்றத்தாழ்வு செய்யவேண்டாம். மிக்க திறங்கொண்ட மாணவர் களைத் தனித்துத் தேர்ந்து மேலும் திறம் பெருக வழி செய்வது தவறு? என்று வினவலாம். அங்ஙனம் செய்வதற்குரிய துறைகளும் வேறு, வயது நிலைகளும் வேறு. அதற்கு வேண்டும் வ

துறைகள் முன்னரே பல உள. அவற்றை இன்னும் கூடுதலாக்கலாம். ஆனால் நவோதயப்பள்ளிக்கல்வி முறைகளும் பாடல்களும் பாடங்களும் இளைய மாணவப்பருவமும் இப்பாகுபாட்டுக்குத் தகுவனவல்ல. இப்போது மையவரசு மேற்கொள்ளும் நுழைவுத் தேர்வு கிராமப்பகுதிப் பெரும்பாலான குழந்தைகட்கும் பெற்றோர்க்கும் ஏமாற்றமாகிவிடும்.

## மாதிரிப்பள்ளியின் பயிற்றுமொழிகள்

எட்டாவது அட்டவணையின்படி பதினான்கு மொழிகளும் தேசியமொழிகளே. இவை ஒவ்வொரு நிலத்தில் மிகுதியாக வழங்குவது நோக்கி மாநிலமொழிகள் என்று தெளிவுக்காகச் சொல்லுகின்றோம் இந்தியும் சில மாநில மொழியே. இந்தியொன்றுதான் தேசிய மொழியாகவும் ஏனைய வெல்லாம் வட்டார மொழிகளாகவும் சொலலிவரும் போக்கு தவறான பரப்பாகும். பெரும்பான்மை சிறுபான்மை என்ற அளவீடும் பலமுறைகளில் கோளாறாகும். ஆறு கோடித் தெலுங்கரும், ஐந்துகோடித் தமிழரும், ஐந்துகோடி மகாராட்டிரரும், நான்கு கோடிப் பஞ்சாபியரும் இவ்வாறே சில மொழியாளரும் சிறுபான்மையினர் என்று குறுக்க முடியுமா? அவ்வாறாயின் நூறுகோடிச் சீனரை நோக்க, எழுபது கோடி இந்தியர் சிறுபாலினர் என்று சொல்லவேண்டும். இந்தியாவில் பல நூறு மொழிகள் இருந்தாலும் தன்னாற்றலும் செம்மையும் வளமும் தன்னிறைவும் உடைய மொழிகளைத் தான் அட்டவணை குறிப்பிடுகின்றது. எனவே இவையெல்லாம் பயிற்றுமொழிகளாகும். தகுதியுடையலவை என்பதனை உணர்வோமாக இவ்வுணர்வு புரியுமானால் மொழிச்சிக்கலுக்கு இந்தியாவில் பேரிடமில்லை.

"முப்பது கோடி முக முடையாள் உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள் - அவள்
செப்புமொழி பதினெட்டுடையாள் எனிற்
சிந்தனை யொன்றுடையாள்"

என்ற மகாகவி பாரதியின் எண்ணமே நமக்கு வழிகாட்டி மொழிப் பன்மை சிந்தனையொருமை என்பது அவன் காட்டும் தெளிவு. நாட்டொருமைக்குப் பன்மொழி தடையன்று; பன்மொழியே கட்டுக்கோப்பு என்பது அவன் சுட்டும் மொழித்திறம்.

## பயிற்றுமொழி மாற்றங்கள்:

ஐந்தாம் வகுப்புவரை தாய்மொழி, மாதிரிப்பள்ளிகளில் ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரையும் தாய்மொழி தொடர்ந்து பயிற்றுமொழியாக இருக்கும். இதன் நோக்கம் இந்திக்கும் ஆங்கிலத்துக்கும்

மாறத் துணை செய்வதாம். இவ்வகுப்புக்களில் இந்தியும் ஆங்கிலமும் அழுத்தமாகச் சொல்லிக் கொடுக்கப்படும். ஒன்பது முதல் பன்னிரண்டு வகுப்புவரை இந்தி அல்லது ஆங்கிலம் பயிற்று மொழியாக வரும். தாய்மொழி ஒரு மொழிப்பாடமாக இருக்கும். இதனைச் சீர்தூக்கின், தாய்மொழி ஐந்தாம் வகுப்புவரை முழுநிலையிலும், எட்டாம் வகுப்பு வரை மாறும் நிலையிலும், பன்னிரண்டாம் வகுப்பு வரை ஒட்டு நிலையிலும் அமையும் எனத்தெரியலாம்.

இம்மொழி நிலை இந்தி மாநிலமல்லாத ஆந்திரம், கன்னடம் தமிழ், மகாராட்டிரம் முதலான மாநிலங்கட்கெல்லாம் பொருந்தும். பீகார், அரியானா முதலான இந்தி மாநிலங்களில் முதல் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்புவரை இந்தி பயிற்றுமொழி மாறாது. சில இந்திய மொழிகள் பாடமொழியாகச் சொல்லப்படலாம்.

இந்தி மாநிலங்களில் கீழ் முதல் மேல்வரை இந்தியொன்றே பயிற்று மொழியாக இருப்பதுபோலத் தானே இந்தியல்லாத மாநிலங்களில் தத்தம் மொழிகள் தொடர்ந்து பயிற்று மொழிகளாக இருக்க வேண்டும் ? மதமாற்றம் போல ஈண்டு பயிற்றுமொழியில் மாற்றஞ் செய்யும் நோக்கமும் பயனும் என்ன ? தெலுங்கு, தமிழ், கன்னடம் குசரத்து முதலான மொழிகட்கு ஐந்தாம் வகுப்புக்கு மேல் மாதிரிப் பள்ளிகளில் பயிற்றுமொழியாக இருக்கும் தகுதியில்லையா ?

### தவறும் காரணமும் :

தெலுங்கு தமிழ் முதலான மொழிகளைத் தத்தம் நிலங்களில் பயிற்று மொழியாக்காமை ஒரு பெருந்தவறு : இந்தியை அதற்குரிய மாநிலங்களிற் பயிற்றுமொழியாக்கி, பிற மாநிலங்களிலும் பயிற்று மொழியாக்கத் திட்டமிடுவது இன்னும் பெருந்தவறாகும்.

*செயதக்க வல்ல செயக்கெடும் : செய்தக்க*
*செய்யாமை யானும் கெடும்*

என்ற திருக்குறட்கு இந்திமொழியாதிக்கம் இன்று நாம் காணும் சான்றாகும். இத்தவறுகள் ஏன் நிகழ்கின்றன ? "பாரதஒருமைப் பாட்டிற்கு இந்தி இன்றியமையாதது ; இந்தி என்ற ஒரு மொழியினால்தான ஒருமைப்பாடு ஏற்படும் ; அதனால் மாதிரிப் பள்ளிகளின் மூலமாக எல்லா மாநிலத்தும் இந்தியொன்றே பயிற்றுமொழியாகட்டும்" என்ற கருத்தழுத்தமே இத்தவறுகளுக்குக் காரணம். பன்மொழிக்கிடையே சிந்தனையொருமை கண்டார் பாரதியார். ஆனால் ஒருமைக்கு ஒருமொழி, அதுவும் இந்தி மொழி என்ற புதிய தாரக மந்திரத்தை மாதிப்பள்ளித்திட்டத்திற் காண்கின்றோம்.

இதுகாறும் இல்லாதபடி, இந்தியின் கூடுதலான முழு ஆதிக்கத்தை மாதிரிப்பள்ளி வெளிப்படுத்துகின்றது. இந்தி பிறமொழி மாநிலங்களில் கிராமங்களையும் கிராமக்குழந்தைகளையும் அணைப்பதோடு பயிற்றுமொழியாகப் புகுவதையும் இலவசம் அளிப்பதையும் உணரலாம்.

## கொள்கையும் செயலும்

சமம் தரம் ஒத்தவாய்ப்பு என்ற நெறிகளைப் புதிய கல்விக் கொள்கை பன்முறை வலியுறுத்துகின்றது. இது பாராட்டுக்குரிய இடமே. முன் சொன்னபடி செயற்பாட்டில் முரண்காண்கின்றோம். மொழிகட்குக் கல்வித்துறைகளில் ஒத்த சமவாய்ப்பும் சமவளர்ச்சியும் இல்லாதபோது ஒருமொழி இன்னொரு மொழியிடத்திலும் புகுந்து முதன்மையாட்சி செய்யும்போது-மாணவர்களிடையே ஒத்த தரக்கல்வி எப்படி இருக்க முடியும்? தொடக்கமுதல் ஒரே பயிற்று மொழியாகப் படிக்கும் இந்தி மாணவர் தரம் கூடுமா? கீழ்நிலையில் சொந்தப் பயிற்று மொழியிலும் இடைநிலை மேனிலையில் சூழ்நிலை இல்லாத வேறொரு பயிற்று மொழியிலும் படிக்கும் மாணவர் தரம் கூடுமா? சொல்ல வேண்டியதில்லை. இந்தி மாணவர்கட்கு ஆறாம் வகுப்பு முதல் தமிழோ, தெலுங்கோ, மலையாளமோ வேறொரு பயிற்றுமொழி வைத்துப்பாருங்கள், நிலை தெளிவாகும்.

## பன்மொழிப் படிப்பு

ஒவ்வோர் இந்தியனும் தாய்மொழியோடு வேறு சில இந்திய மொழிகளும் கற்றாக வேண்டும். பள்ளியின் அகத்தும் புறத்தும் இந்திய மொழிகளின் படிப்புக்கு இலவசமான வாய்ப்புக்கள் பெருக வேண்டும். ஒவ்வொரு மாநிலத்தும் பிற இந்திய மொழிகளை ஓரளவேனும் புரிந்து கொள்வதற்கு வழிவகை செய்யவேண்டும். நீண்ட வரலாற்றில் உறவான ஆங்கிலத்தை எளிதில் விட்டுவிட முடியாது. நம்மொழிகளின் புதுமை வளர்ச்சிக்குப் பல்லாண்டுக் காலம் ஆங்கிலச் செவிலி இன்றியமையாதவள். எனினும் தாய் மொழியோடு இவையெல்லாம் வேண்டும் என்ற கல்விக் கொள்கையே கசடற்றகொள்கை. ஒரு மாணவனுக்கு மழலையர் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தாய்மொழிதான் ஒரே பயிற்று மொழியாக இருப்பது இயற்கை.

பன்மொழிப் படிப்பு நன்று; பயிற்றுமொழி மாற்றம் தீது குழந்தைகட்கு மொழி மாற்றஞ்செய்வது கொடுமையாகும், திணிப்பாகும் ஓடிய சிந்தனையை வற்றச் செய்வதாகும். மாதிரிப்பள்ளியில் மொழித்திட்டம் வகுத்தோர் ஏனை இந்திய மொழிகளை உரிய

நிலத்திலுங்கூடப் பயிற்றுமொழியாக்காமையை நினைத்துப் பார்க்கும்போது. சூடில்லா நெருப்பும் நீரில்லா ஆறும் குருதியோடா நெஞ்சும் உயிரில்லா உடம்பும் உரிமையில்லா நாடுமே நம் நினைவுக்கு வருகின்றன. பதினான்கு தேசிய மொழிகள் கொண்ட உரிமை இந்தியாவில் பரந்த வேலை வாய்ப்புக்கு ஏனையோர் இந்தி படிக்கவேண்டும் என்ற காரணங்கூறுவது அழகில்லை. இது புதிய அடிமைச் சின்னமாகும்.

## உணர்வுமொழி

புதிய பாடத்திட்டத்தில் நீண்ட இந்திய விடுதலைப் போராட்ட வரலாறும், விடுதலைப் பெரியோர்கள் வரலாறும், உரிமையுணர்வும் எல்லாம் கூடுதலாக இடம் பெறும் என்பது நல்ல செய்தியே. ஆனால் இவ்வுணர்வுச் செய்திகளை ஒரு மாணவன் தன் தாய் மொழியிற் படியாது பிறமொழிவாயிலாகப் படிப்பான் என்றால் கல்வி வரலாம், உணர்வு வருமா? வாய்வழி உண்ணலும் மூக்கின் வழி உயிர்த்தலும் போன்றது தாய்மொழி உணர்வு.

விடுதலை வரலாற்றை நினைத்துப்பாருங்கள். நாடு முழுதும் ஒரு மொழி மூலம் உரிமைக்கனலைப் பெருக்கவில்லை. அந்தந்த மொழிக் கவிஞர்களும் சொல்வல்லார்களும் தாய்மொழி மூலந்தான் பட்டி தொட்டி எங்கும் அடிமை தொலைக்கும் விடுதலைப் போரை முழக்கினர். பன்மொழி வாயிலாக விடுதலைச்செல்வம் பெற்றோம். அவ்வாயில்களே எதிர்காலத்தும் ஒருமையுணர்வுப் பண்ணைகளாம்.

## தாய்மொழிக்குச் சாவுமணி

நவோதயப் பள்ளியின் மொழிக்கொள்கை நடைமுறைக்கு வந்தால், தீயவிளைவுகள் பல தோன்றும். ஆறாவதிலிருந்து இந்தியாகவும், ஆங்கிலமாகவும் பயிற்றுமொழி மாற்றம் வரும் என்பதை அறியும் பெற்றோர்கள், என்ன நினைப்பார்கள், பின்பு தம் பிள்ளைகள் இம்மொழித் தொல்லைக்கு ஆளாகக் கூடாது என்று முதல் வகுப்பிலிருந்தே இந்தியும், ஆங்கிலமும் கற்பிக்கும் பள்ளிகளில் சேர்த்துவிடுவர். இதனால் தமிழ் முதலான மாநில மொழிகள் ஐந்து வகுப்பு வரையுங்கூட இல்லாதொழியும். பன்னிரண்டு வகுப்பு வரை இந்தியும், ஆங்கிலமும் பயிற்று மொழியாகக் கற்ற இம்மாணவர்கள் கல்லூரி பல்கலைக் கழகத்திலும் இவற்றையே பயில்வர். இவ்வாறு சென்றால் மாதிரிப்பள்ளி மாணவர்கட்குத் தம் தாய்மொழி எந்த நிலையிலும் இல்லாது போகும். இது கற்பனையன்று. ஆங்கில மழலையர் பள்ளிகள்

சிற்றூர் தோறும் தெருத்தோறும் முளைப்பதை நாம் காணாதவர்கள் அல்லர். இனி இந்திப் பள்ளிகளும் நம் வீதிகள் தோறும் வரும். தமிழ்ப் பள்ளிகள் ? ... ? ... ? ...

## உறுதியான மொழிக்கொள்கை

புதுக்கல்விக் கொள்கை உலகில் வளர்ந்துவரும் தகவற் கரணங்களையும் மெல்லிய நுண்கருவிகளையும் தழுவிக்கொண்டு கல்வியியலைப் புதுப்பிக்க வேண்டும் எனக் கூறும்போது, எனைத்துக் கருவிக்கும் மூலமான, மானிடக் கருவியான தாய் மொழியை - கல்வித் திட்டத்தில் இதன் முதலுறவைச் சுட்டிப்பேச வில்லை. இந்திய மொழிகளையெல்லாம் பயிற்று மொழியாக்க வேண்டும் என்ற அடிப்படைத் திட்டமிடவில்லை. இது பழியான பெருங்குறை. இதனாலன்றோ ஐதராபாத்திற் கூடிய கல்வி அமைச்சர்கள் தங்கள் மாநிலத்து மாதிரிப் பள்ளிகளில் தங்கள் மொழி மட்டுமே பயிற்று மொழியாக இருக்கவேண்டும் என்று ஒரு தீர்மானம் போட்டுக் கேட்கவேண்டிய அவலநிலை ஏற்பட்டிருக்கின்றது.

கல்விச் செம்மையில் ஒன்றினைக் கடைப்பிடிப்போம். நம் விடுதலைப் பழம்பெருந்தலைவர்கள் உணர்ந்து சொல்லியதும் உலகக் கல்வியாளர்கள் மெய்பாகக் கண்டதுமான தாய்மொழிக் கொள்கைக்கு உரிய மதிப்புக் கொடுப்போம். பாலர் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தாய்மொழி ஒரே பயிற்றுமொழியாகக் கொள்ளாதவரை-எல்லா இந்திய மொழிகட்கும் கல்வித்துறையில் ஒத்துவளரும் சமவாய்ப்பை நல்காவரை-எந்தப் புதிய கல்விக் கொள்கையும் உயிரும் உணர்வும் உரிமையு அற்ற கொள்கையாகவே இருக்கும்.

## செயல் முறைகள்

மேலே விளக்கியபடி மாதிரிப்பள்ளி இளம் மாணவர்களைத் தேசிய உணர்வில் இருவருக்கப்படுத்துவதாலும் திறமை திறமையின்மை என்று ஒதுக்குவதாலும் இந்தியல்லாத பதின்மூன்று இந்திய மொழிகளை உரிய மாநிலத்திலும் புறக்கணிப்பதாலும் மாதிரிப் பள்ளித்திட்டம் கைவிட வேண்டியதொன்று என்பது என் பணிவான மதிப்பீடு. இத்திட்டத்தில் உள்ள சிலநல்ல கூறுகளையும் விடுதலை வரலாறு. ஒருமைப்பாடு, கல்வித்தரம், சமவாய்ப்பு, கிராம நலம் முதலியவற்றையும் முன்னரே நடந்து வரும் பல்லாயிரக் கணக்கான பள்ளிகளின் வழி திறமையாக நிறைவேற்றலாம். இதனால் சராசரிக் கல்வித்தரமும் திறமைப்பாடும் பலகோடி ஏழை

யரும் பிறநம் பெறுவர். பாரத நாட்டின் கல்வி வளம் பன்மடங்கு சீராக உயரும்.

கல்வி என்னும் பெரு மண்டிலம் பொதுப்பட்டியலில் இருப்பது தவறில்லை நிதிபலகோடி கிடைக்கும் ஆனால் மையவரசுசில வரம்பு கொள்ளல் நலம். உயர் கல்வியிலும் ஆய்வுப் பெருக்கத்திலும் புத்தக வெளியீட்டிலும் நூலக வளர்ச்சியிலும் இந்திய மொழிகளை இலக்கியங்களை பிறநாடுகளிற் பரப்புவதிலும் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களோடு கல்வியறிவுத் தொடர்பு கொள்வதிலும் மையவரசு பெரும்பங்கு கொள்ளலாம்.

## இந்திய ஒதுக்கியம் (Indian apartheid)

புதிய மாதிரிப்பள்ளித்திட்டம் புது வகையான ஒதுக்கல் வாடை காட்டுகின்றது இந்தியல்லாத பிற எல்லா இந்திய மொழிகளையும் பல கோடி மாணவர்களையும் சமவாய்ப்பின்றி ஒதுக்குகின்றது. தென்னாப்பிரிக்க வெள்ளையரசின் (apartheid) நிற இன வெறிக் கொள்கையை உலகறிய எதிர்க்கும் நம் நல்லரசு இந்தியாவில் இந்திக்காக இப்படி ஒரு புது ஒதுக்கற்கொள்கைக்கு அரசியலமைப் பிற்கு முற்றும் மாறாக இடங் கொடுக்கலாமா ?

முடிவும் அதற்குரிய நெறியும் நல்லதாக வேண்டும் என்றார் தேசத்தந்தை காந்தியடிகள். ஒருமைப்பாடு என்ற முடிவு நல்லது, தெளிவானது. இந்தி என்ற மொழிக்கொள்கைதான் தேச ஒருமைப் பாடு தரும் என்ற நெறியும் ஆதிக்கமும் அணுவளவும் நன்றல்ல பெருந்தீங்காகும். இயல்பாக வழிவழி ஒரு மொழி பேசும் நாடுகளிடையே கூட ஒற்றுமையில்லை என்பது உலகறிந்த வரலாறு. ஆதலின் ஒருமைப் பிளவுக்கும் உரிமைத் தாழ்வுக்கும் சமவொழிப்புக்கும் காரணமாகும். மாதிரிப்பள்ளித் திட்டம் தொடங்காது அறவே கைவிடப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

"செப்புமொழி பதினெட்டுடையாள் எனிற்
சிந்தனை யொன்றுடையாள்"

என்று தேசியப்புலவன் பாரதி பாடிய பன்மொழி யொருமைச் சிந்தனையே நம் கல்விக்கொள்கையாக விளங்குக.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## "சுந்தரரின் கோட்பாடுகள்"

ப. குமரன் ஆய்வாளர்,
தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

திருமணக்கோலத்தில் இருந்த சுந்தரரைத் தடுத்தாட் கொள்ள வந்த இறைவனைச் சுந்தரர்,

"ஆசிலந்தணர்கள் வேறோர் அந்தணர்க்கடிமையாதல்
பேச இன்றுன்னைக் கேட்டோம் பித்தனோ மறையோன்"

என்று கூறுகின்றார். பின்பு இறைவன் தோன்றித் தன்னைத் தடுத்தாட் கொண்டதனைக்கூறி நீ என்னைப் பித்தனென்றே கூறினாய் ஆதலால் என்பெயர் பித்தா என்றே பாடுக என்று அடியெடுத்துக் கொடுக்க,

"பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினியல்லேனெனலாமே"

என்று பாடுகின்றார். இறைவனையே வன்சொல்லால் அழைத்ததால் இவர் வன்றொண்டர் என்று போற்றப்படுகின்றார். பிறவித் துன்பத்துள் மீண்டும் மீண்டும் சிக்கிச் சுழலாமல் இறைவனுக்குத் தொண்டனாக இருப்பது எப்பிறவிகளிலும் பயனளிக்கும் என்பது இதன் மூலம் புலப்படுகின்றது. தோழன், தோழமை, தோழர் போன்றவைகள் தம்முடன் ஒத்து சமநிலையில் உள்ளவர்களுக்கே பொருத்தமுடையவைகளாகும். உயர்ந்த அன்பு நெறியில் அடிமைத் தன்மைக்கே இடமில்லை. இந்த உயர்ந்த அன்பு நெறியே சிவபெருமானுக்கும் — சுந்தரருக்கும் இடையே நிலவியிருந்தது. இந்தநிலை மற்ற பொது மக்களுக்கும் உண்டு. சிவன் அனைவருக்கும் தோழன் என்ற பொருள் பொதிந்த கொள்கையினைச் சுந்தரர் தம் பாடல்களின் வாயிலாய் அறியலாம்.

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய்" —என்றும்
"தன்னைத் தோழமையருளித் தொண்டனேன் செய்த
துரிசுகள் பொறுக்கும் நாதனை நள்ளாறனை" —என்றும்

சுந்தரர் தாமே பாடிய பாடல்களில் இறைவர் தம்மை இவர்க்குத் தோழராகத் தந்தார் என்ற செய்தி அகச்சான்றுகளாக அமைந்துள்ளன.

## அகரக்கோட்பாடு :

"எழுத்திற்கெல்லாம் அகரம் முதலாவதுபோல் ஆன்மாக்கள் பதியாகிய இறைவனையே நம்பியிருக்கின்றன. விறகில் தீ போலவும், பாலில் நெய் போலவும், பழத்தில் சுவை போலவும், எள்ளிற்குள் எண்ணெய் போலவும் பதியும் பசுவும் கலந்து நிற்கின்றன. பதியாகிய இறைவனுடைய அருளினால் ஆன்மாக்கள் மும்மலங்களினின்றும் விடுபட்டுச் சாலோக, சாரூப, சாமீப, சாயுச்சமாகிய நான்குபதவிகளையடைய உதவி செய்வது சைவசித்தாந்தத்தின் முக்கிய கொள்கையாகும்"[2]. இதற்கேற்பக் கண்களை இழந்து ஆரூரார் துன்பப்படுகையில் ஊன்றுகோல் கொடுத்து உதவிய இறைவனை நினைந்து பாடுகையில்,

"உழையுடையான் உள்ளிருந்து
உளோம் போகீர் என்றானே"

என்று கூறுகின்றார். துன்பத்திலிருந்து விடுபட இறைவனை வேண்டும் நிலையிலும் இறைவன் தன்னுள் பிரிக்க முடியாது கலந்திருப்பதை உணர்ந்தவர் என்பது இப்பாடல் மூலம் அறியலாம்,

## அருளியல் கோட்பாடு

பிறர்க்குத்துன்பம் வந்துற்ற காலை அத்துன்பத்திற்கு இறங்கி அதனினைப் போக்க முற்படுவதும், பிற மக்களையும் தம் மக்கள் போல் பாவித்து அன்பு செலுத்துவதும், தாம் கொண்ட கொள்கையினைப் போன்று பின்பற்றும் மற்றவர்களைப் போற்றி வணங்குவதும் அறிவினும் பண்பினும் சிறந்த சான்றோர்களின் செயல்களாகும். இக்கோட்பாடுகளின் மூலம் பொதுமக்களிடையே ஓர் சமத்துவப் பண்பும், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் தன்மையும், மனித உறவின் மேம்பாட்டிற்கான வழி முறைகளையும் காண முடியும்.

இச் செய்திகளுக்கு அடிப்படையாகச் சுந்தரர் தமது பாடல்களின் மூலம் வழிகாட்டிச் சென்றுள்ளார். சோழநாட்டின் படைத் தலைவரான கோட்புலிநாயனார் தமது ஊரான திருநாட்டியத்தான் குடியினுக்குச் சுந்தரர் வருகை புரியுமாறு வேண்டினார். அவ்வாறே சுந்தரரும் செல்லுகையில் அவரை அன்புடன் வரவேற்றுத் திருவமுது செய்துவித்தார். பின்பு தன் இரு பெண்மக்களாகிய சிங்கடி, வனப்பகையாரை அவரது அடிமைகளாக ஏற்றருள வேண்டினார். சுந்தரரும் உடனே இவர்கள் இருவரும் என் குழந்தைகள் என்று கூறி அவர்களைத் தம் அன்பின் மூலம் சிறப்பித்தார். இதனைப் பெரியபுராணம்,

"அடியேன் பெற்ற மக்களிவர் அடிமையாகக்
கொண்டருளிக்
கடிசேர் மலர்த்தாள் தொழுதுய்யக் கருணையளிக்க
வேண்டுமெனத்
தொடிசேர் தளிர்க்கை இவர் எனக்குத் தூயமக்கள்
எனக்கொண்டப்
படியே மகண்மையாகக் கொண்டார் பாவையார் தம்
கொழுநனார்

என்று கூறுகிறது. அறுபத்து மூன்று நாயன்மார்களுள், ஒருவரான கலிக்காமநாயனார் சுந்தரர் சிவனைத் தூது அனுப்பியது குறித்து வருத்தமும் கோபமுங்கொண்டிருந்தார். இதை நீக்கும்படி சுந்தரர் இறைவனிடம் வேண்ட அவர் கலிக்காமருக்குச் சூலை நோயினை வருவித்து அது சுந்தரர் வந்தால்தான் தீரும் என்று கலிக்காமரிடம் கூறினார் கலிக்காமருச் சுந்தரர் வருவது பிடித்தமில்லை யாகையால் உடைவாளால் வயிற்றினைக் குத்திக்கொண்டு மாண்டு போனார். இறைவன் திருவருளால் சுந்தரர் கலிக்காமர் மாளிகை யினை அடைத்து அவரது நிலையினைக்கண்டு மிகவும் துன்புற்று இந்நிலைக்கு யானே காரணம் என்று கருதித் தற்கொலைக்கு முயற்சிசெய்யும் தருவாயில் கலிக்காமர் மீண்டும் உயிர் பெற்று எழுந்து பின்பு இருவரும் நண்பராயினர். இதனை.

"ஏகநன்னிலம் ஈரறுவேலி ஏயர்கோன் உற்ற
இருப்பிணி தவிர்த்து"

என வருந்தொடரால் சுந்தரர் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். "சமய சிந்தனைகளில், அறவுணர்வும் தத்துவ ஆராய்ச்சியும் முக்கிய இடம் பெற்றிருப்பினும் வழிபாட்டுமுறைகளே-பக்தி இலக்கியம் உருப் பெற்று வளர்ந்ததற்குக் காரணம் எனல் வேண்டும்" என்பதற்கேற்ப அடியாரை அடியார் வழிபடுவதும், இறைவனை அடியார் வழிபடுவதும் இவரது பாடலில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

## உலகளாவிய பொதுமைக் கோட்பாடு

ஆரூரர் சைவசமய அடியார்களின் திருத்தொண்டின் திறத்தை விரிந்துரைக்கும் வண்மையாகத் திருத்தொண்டத்தொகை பாடி யுள்ளார் இதில் பலதிறப்பட்ட அடியவர்களினைக் குறிப்பிட்டுள்ள தால் ஓர் உலகளாவிய பொதுமைக் கோட்பாடு இதில் பொதிந்து காணப்படுகின்றது." சுந்தரமூர்த்தி நாயனார் தம்மை 'அடியார்க்கடியேன்' என்று கூறிக் கொள்கிறார். திருத்தொண்டத் தொகைப்பதிகம் முழுவதும் இதையே

குறிப்பிடுகிறது. தொண்டர்கள் என்னும் ஒரு புதிய கோட்பாடு சுந்தரருக்கே உரியது. அடியார்களை மதித்து வழிபடும் முறை சுந்தரர் காலத்திருந்தே சைவ சித்தாந்தத்தின் ஒரு பகுதியாக அமைந்துவிட்டது. இதனால் சிவனடியார் திருக்கூட்டம் என்ற ஒன்றினையே ஒருவன் காணமுடியும் அடியார் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர் என்பதைத் தவிர அவருடைய சாதி, குலம் முதலியவை கண்ணில்படாமல், எல்லாக் காலத்துக்கும் பொருந்தக்கூடிய அடியார்கள் குடியரசு ஒன்றைச் சுந்தரர் இதன்மூலம் உருவாக்கித் தந்துள்ளார்"[4] என்று டாக்டர் டி. பி சித்தலிங்கம் கூறுகின்றார். இதனையே மொ. அ. துரைஅரங்கசாமி அவர்களும் தமது நூலில்

'Tiruttontattokai is therefore a vision of Arurar. It is a mys'ic and universal vision. The History is there; the particular individuval and their Peculiar modes of worship From the basis but this basis rises to the spiritual greatness of poetic truth and a mystic vision of universal significance. The whole Universe is brought within its scope and transcended"[5] என்று குறிப்படுகின்றார் சுந்தரர் தலங்கள் தோறும் சென்று பாடிச்சைவ நெறியினைப் பரப்புவது, இல்லறத்தில் ஈடுபாடு கொண்டே சைவசமயத்தில் பற்றுக் கொள்வது, அடியார்களுக்கு ஏற்படும் இடர்களைக் களைவது, இறைவராகிய சிவபெருமானைத் தனக்கு உற்ற நண்பராகக் கருதுவது, தனக்குத் துன்பம் ஏற்படும் போதெல்லாம் இறைவனை மனமுருகிப்பாடி அத்துன்பத்தினைப் போக்கிக்கொள்வது, சிவபெருமானின் பெருமைகள், அருட் செயல்கள், அவனது உருவஅழகு, தத்துவக் கருத்துக்கள் போன்ற முறைகளில் சுந்தரர் சைவசமயத்தில் ஒரு புதிய கோட்பாட்டினையே உருவாக்கியுள்ளார். இவர் செய்த அற்புதங்களைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

"வெம் கராவுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை வாரணமீதில் இருத்துமே
மங்கை பாகரைத் தூது நடத்துமே
மருவி ஆறு வழிவிட்டு நிற்குமே
செங்கல் ஆனது தங்கம தாகுமே
திகழும் ஆற்றிட்ட செம்பொன் அளிக்குமே
துங்கவான்பரி சேரற்கு நல்குமே
துலங்கு சுந்தரர் செந்தமிழ்ப் பாடலே"[6]

## குறிப்புகள்

1. ப. அருணாசலம், *பக்தி இலக்கியம்*, ப. 244.
2. அ. கிருஷ்ணசாமி, *தென்னிந்திய வரலாறு*, ப 343
3. ப. அருணாசலம், *பக்தி இலக்கியம்*, ப 21.
4. டி. பி. சித்தலிங்கம், *சைவசமயத் தோற்றமும், வளர்ச்சியும்*, ப. 36.
5. M.A. Dorai Rangaswamy, *The Religion and philosophy of Tevaram* P. 1129
6. கே. ஆறுமுக நாவலர், *இந்து மத இணைப்பு விளக்கம்*ப. 187,

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

# கதையாசிரியர்களும் உத்திகளும்

பேராசியர் இரா. சண்முகவேலன்
அ. வீ. வா. நி. புட்பங்கல்லூரி,
பூண்டி.

## நோக்கம்:

'இலக்கு' உடையது இலக்கியம் என்கிறபோது அந்த வட்டத்திற்குள் ஒரு வட்டமாக விளங்குகிற கதை இலக்கியத்திற்கு இலக்கு இல்லை என்கிற விலக்கு இல்லை. கலையின் இருபெரும் நோக்கங்களாகக் கலைகலைக்காக (Art for Art's sake), கலை வாழ்க்கைக்காக (Art for Life's sake) எனக் குறிப்பிடுவர். பொது நிலையில் கூறப்பெற்ற இவ்விரண்டு நோக்கங்களுக்குள்ளே தனி மனித நோக்கங்கள் பல உள்ளன. ஒவ்வொரு கலைஞனையும் அல்லது ஒவ்வொரு கதையாசிரியனையும் அணுகி வினவினால் இந்த உண்மை விளக்கமாகும். ஏன், எதற்காக, எழுதுகிறீர்கள்? என்று கேள்விகள் தொடுத்தால் அவற்றிற்கு அவர்கள் கூறும் பதிலுரைகளில் நமக்குப் பல தெளிவாகும். தினவைத் தீர்த்துக் கொள்ளவும், சமுதாயக் கொடுமைகளைச் சீர்திருத்தவும் என இப்படிக் கதையாசிரியர்கள் கதைகளைப் படைப்பதற்குரிய காரணங்களையும், நோக்கங்களையும் வெளிப்படுத்தியுள்ளனர்.[90] ரிச்சர்ட்ஸன் தன்னடத்தையைக் கற்பிப்பதற்காகவும், பீல்டிங் காலத்தின் நடப்புகளைச் சீர்திருத்துவதற்காகவும், டிக்கன்ஸ் சமுதாயத் தீமைகளை வெளிப்படுத்துவதற்காகவும், ட்ரோலோப் பணம் திரட்டுவதற்காகவும் நாவல்களை எழுதியதாகக் காரணங்களைக் கூறியுள்ளனர்[91]. காரணங்களும் நோக்கங்களும் வேறு வேறானவை என்றாலும் ஒன்றை ஒன்று தழுவி நிற்பதால் இங்குக் காரணங்களாகக் கூறப்பட்டவற்றை நோக்கங்களாகக் கொள்வதில் தவறில்லை.

மேற்கண்டவாறு கதையாசிரியர்கள் தத்தமது நோக்கங்களை வெளிப்படையாகக் கூறுவதுமுண்டு; கூறாமல் குறிப்புணர்த்தலும் உண்டு. அக்குறிப்பினைப் படிப்பவர் புரிந்துகொள்ளும் போது கதையாசிரியரின் நோக்கம் தூலமாகத் தெரியவரும். ஆங்கிலத்தில் 'Tone' என்றும் தமிழில் 'தொனி' என்றும் கூறப்படுவதை இங்கு நாம் நினைவுகூர்தல் வேண்டும். ஒரு நூலில் ஆசிரியரின் நோக்கு (நோக்கம்) வெளிப்படையாகக் கூறப்படாவிடில், அந்நூல் எழுதப் பட்டிருக்கும் முறையினின்று வாசகர் அதைப்புரிந்து கொள்ள

வேண்டும். அத்தகைய நோக்குக்கே 'தொனி' எனப்படும். இது ஒருவரின் பேச்சிலிருந்து அவரது நோக்கினை ஊகிப்பது போன்ற தாகும். 'Tone' என்பதற்கு பொழிநடை (Style) என்கிற ஒரு பொருளுமுண்டு. இனி, நோக்கத்திற்குத் திரும்புவோம்.

வி. கோ சூ வின் ***மதிவாணன்*** 1897-ஆம் ஆண்டு முதல் "ஞான போதினி"யில் சி. வை. தாமோதரம் பிள்ளையின் வேண்டு கோளின்படிப் பகுக்கப்பட்டுச் சிறிது சிறிதாக வெளியிடப் பெற்றது. ஆசிரியர், "மதிவாணன் என்னும் பெயரிற் புதுவது புனைந்த ***இச் செந்தமிழ்ச் சிறுகதை***" (கோடு எம்மால்) என்று 'முகவுரை' யில் அழுத்திச் சொல்வதால் அக்கதையின் தன்மை எப்படிப்பட்டது என்பது தெளிவாவதுடன் அவருடைய நோக்கமும் புலனாகின்றது. அவருக்கு முன்னே தோன்றிய கதை இலக்கியங்களை அறிந்து அவற்றின் மொழி நடையினின்றும் மாறுபட்டுத் தாம் செந்தமிழ்ச் சிறுகதையொன்றை எழுத நோக்கம் கொண்டதை அவ்வரி சொல்லாமல் சொல்கின்றது. இந்நோக்கத்தினை நிறைவேற்றப் பரிதி மாற்கலைஞர் கதை அமைப்பிலும் மொழி நடையிலும் பெரிதும் மாற்றத்தைப் புகுத்தியுள்ளார்.

> திருவளர்ந் தோங்கும் பரத கண்டத்துப் பாண்டிய நாட்டுத் தலைநகராகிய மதுரையென்னும் மாநகரத்து வையையாற்றின் வடகரைக் கண், ஒரு நாட்காலைப் பொழுது புலர்ந்து சிறிது நேரஞ் சென்ற பின்றைச் செவ்விய மேனியன் சிறந்த நோக்கினன் பரந்த மார்பினன், பவள வாயினன், பதினாறாட்டைப் பிராயத்தான் ஓரிளந்தோன்றல் போர்க் கோலம் பூண்டு, புரவி மீதேறிக் காற்றினுங் கடுகித் தென்புல நோக்கி வாராநின்றான்.

இப்படித் தொடங்குகின்றது செந்தமிழ்ச் சிறுகதை. கதை கூறப் படும் மொழிநடையேயன்றிக் கதை மாந்தர்கள் பேசுகின்ற பேச்சுக் களிலும் ஆசிரியரின் நோக்கமே—செந்தமிழ் மொழிநடை உத்தியே தலைதூக்கி நிற்கின்றது. ஓர் எடுத்துக்காட்டு :

"ஆண்டிருந்து நீ யென்றிவட் போந்தனை !"
"யானிங்குப் போந்து முந்நாளாயின."
"இன்னுங் காலைக் கடன் கழித்தலை கொலோ ?"

(***மதிவாணன்***, ப. 21)

ஆசிரியரின் ஆற்றலைக் குறித்தும் இந்நாவலைப் பற்றியும் கருத்துரைக்கையில் க. கைலாசபதி,

> ... தமிழ் உரைநடையை நவீன இலக்கிய உணர்வுடன் கையாளுவதற்குப் பரிதிமாற் கலைஞரின் செந்தமிழ் நோக்கு, பெருந்தடையாயிருந்தது என்பது உறுதி யெனினும், ஒன்று கூறவேண்டும். முற்கிளந்த நாவலாசிரியர்களுடன் (பி. ஆர். ராஜமையர், அ. மாதவையா) ஒப்பு நோக்குகையில், கலைஞரின் நடை கடுமையானதாயிருப்பினும், அவருக்கு முன்னும், பின்னரும் 'செந்தமிழ்' நடையைக் கையாண்ட பலரது நடையுடன் ஒப்பிடுகையில் அவரது நடை குறிப்பிடத் தக்க அளவு எளிமையுடையது என்பதை ஒப்புக் சொள்ள வேண்டும். "எளிய நடையிற் பேசுவதும் எழுதுவதுமே விரும்பத் தக்கது என்பதுதான் என் கொள்கை" என்று அவர் கூறியிருக்கிறாரெனினும், உயர் கல்வி கற்ற மாணவரையும் வித்தியார்த்திகளையும் கருத்திற்கொண்டு எழுதியமையால் உயரிய செந்தமிழ் நடையில் எழுதினுர் எனலாம்.

என்பர். இக் கூற்றினால் ஆசிரியருக்கு இரட்டை நோக்கம் இருந்த தாகக் கருதலாம். ஒன்று, செந்தமிழில் கதை எழுதவேண்டும் என்பது; மற்ருென்று, அது யாருக்காக எழுதப்படுகிறது என்பது. எனவே, 'ஏன் எழுதுகிறேன் ?' 'யாருக்காக எழுதுகிறேன் ?' எனும் இரு கேள்விகளுக்குரிய விடையாகவே படைப்பு இலங்குவ தோடு, அவ்விரு நோக்கங்களையும் நிறைவு செய்யச் செந்தமிழ் நடைக் கூற்று உத்தியினை மேற்கொண்டுள்ளார் என்பது தெளிவு. இப்படிப் பார்க்கையில், "படைப்பிலக்கியம் பற்றி ஆசிரியருக்கிருந்த மயக்கத்தை" அது காட்டாமல் உணர்வுடன் கூடிய நோக்கத்தையே காட்டுவதாக நாம் உண்மையை விளங்கிக் கொள்ளலாம்.

சி. சுந்தரம் ஐயர் எழுதிய *கிரிஸெல்டா அல்லது பொறுமை யுள்ள மனைவி* (Griselda or The Patient Wife-1908) என்னும் குறு நாவலில் ஆசிரியர் வெளிப்படையாய் 'முன்னுரை' என்று ஒன்று அமைத்துத் தம் நோக்கத்தைப் புலப்படுத்தவில்லை. ஆனால், தம் நோக்கத்தை உத்திகளின் மூலம் வெளிபடுத்தி யுள்ளார். நாவலின் தலைப்பில் துணைத் தலைப்பாகப் *பொறுமை யுள்ள மனைவி* என்று அமைந்திருப்பதே கதையின் உள்ளீட்டைக் காட்டுவதாகும். *கிரிஸெல்டா* என்ற பெயர் மட்டுமே இருப்பின் இந்நோக்கம் எவ்வழியிலும் வெளிப்பட ஏதுவில்லை பெயரில் வெளிப்படும் ஆசிரியரின் நோக்கம் கதைப் பின்னலிலும், ஆசிரியரின் நேரடிக் கூற்றிலும் பட்டுத் தெறிக்கின்றது. கதைத்

தலைவனாகிய வால்டர் ஓர் ஏழை இடையர் குலப் பெண்ணாகிய கிரிஸெல்டாவை விரும்பி மணந்து கொள்கிறான்; அவளுடன் இன்பமாய் வாழ்கின்றான். ஆயினும், அவன் உள்ளத்தில் தன் மனைவின் பொறுமையைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும் என்கிற முனைப்புக் கிளர்ந்து எழவே கிரிஸெல்டாவைப் பலவாறு துன்புறுத்துகின்றான். என்றாலும், அவள் தன் கணவனின் நலமே பெரிதென்று நினைந்து அவன் ஆட்டியவாறெல்லாம் சற்றும் அகமும் முகமும் கோணாது நடக்கின்றாள். இறுதியில் அவனே அவளது பொறுமையின் பெருமையை மதித்துப் போற்றுகிறான். கிரிஸெல்டாவின் பொறுமையை வெளிப்படுத்துவது ஆசிரியரின் நோக்கமாகையால் வால்டரின் சோதிப்புக்களைக் காரண காரியத்தோடு பின்னியுள்ளார். பிலிப்ஸ்டீவர் (Philip Stevark) தம்முடைய *நாவலின் கொள்கை* (The Theory of The Novel) என்னும் நூலில் பதினான்கு வகையான கதைப்பின்னல்களைக் குறிப்பிடுகிறார்.[92] அவற்றுள் ஒன்று 'சோதனைக் கதைப்பின்னல்' (Thetesting Plot) என்பதாகும். இரக்கமும் சிறந்த மன வலிமையும் உடைய ஒரு பாத்திரம் சூழ்நிலைக்கு அடிபணிய நேரிடலாம். அந்நிலையில் அப்பாத்திரம் சூழ்நிலைக்கு ஏற்ப வளைந்து கொடுத்தோ, கொடுக்காமலோ தன்னுடைய உறுதிப்பாட்டினின்றும் பிறழமல் நிமிர்ந்து நிற்பதைக் காட்டுவதே இத்தகைய கதைப்பின்னல். இந்நாவலில் வால்டர், கிரிஸெல்டாவை வேண்டுமென்றே சோதனைகளுக்கு உட்படுத்துகின்றன. கிரிஸெல்டாவின் பெண், ஆண் ஆகிய இரு குழந்தைகளையும் அவளிடமிருந்து பிரிப்பது, அவளை அரண்மனையைவிட்டு விரட்டுவது, மீண்டும் அவளை அரண்மனைக்குக் கூட்டிவந்து ஏவல் புரிய வைப்பது, இரண்டாவது திருமணம் செய்துகொள்ளத் தேர்ந்தெடுத்த மணப்பெண்ணிற்கும், அவளுடைய உறவினர்களுக்கும் தொண்டு செய்ய பணிப்பது போன்ற சோதனைகளின் ஒவ்வொரு கட்டத்திலும் கிரிஸெல்டா மனந்தளராமல் உறுதியுடன் நின்று தனது பண்பை நிலைநிறுத்துகின்றாள். இவ்வாறு ஆசிரியர் தாம் கொண்ட நோக்கத்திற்கேற்றவாறு மேற்கூறிய கதைப் பின்னலைத் தலையாய் உத்தியாகக் கையாண்டுள்ளார். பொறுமையுள்ள மனைவியை இப்படிப்பட்ட கதைப்பின்னலான்றிப் பிறவற்றால் தெளிவாகக் காட்ட இயலாது. கதையின் இறுதியில் ஆசிரியர் தம் நோக்கத்தை நேரடியாகவே பின் வருமாறு கூறுகின்றார்.

இக்கதையை நாம் கூறியது எதற்கெனின், பெண்பாலர் கிரிஸெல்டாவைப் போலப் பொறுமையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதன் பொருட்டு அல்ல; ஏனெனில் அவர்கள்

எவ்வளவு பிரயாஸப்பட்ட போதிலும் கிரிஸெல்டாவைப் போல நடத்தல் அஸாத்தியம் ஆனால் கிரிஸெல்டா எப்படி ஸம்பத்திலும் விபத்திலும் ஒரேவாறாய் மனநிலை தவறாது நடந்து வந்தாளோ, அவ்வாறே ஒவ்வொரு மனிதனும், தன்னால் கூடிய மட்டும், நல்வழியிலேயே தன் மனதை நிலைநிறுத்தவேண்டும் என்பதே. என்ன, ஒரு பெண்மகள் தன் கணவனிடம் இவ்வளவு பொறுமை காட்டினாளாயின், கடவுள் செய்யும் பரிக்ஷைகளுக்கு இன்னும் எவ்வளவு அதிக வணக்கத்தோடு நாம் பொறுமையை விளங்கச் செய்ய வேண்டும். நமக்கு நேர்வதையெல்லாம் மனச்சமாதானத் துடனே, ஏற்றுக்கொள்ள வேணும். நமக்கு நேரும் இடரனைத்தும் கடவுள் பரீக்ஷையென்றே சொல்லத்தகும். அவைகளுக்குப் பின் வாங்கி மனம் தளரலாமோ ? பலவகைத் துன்பங்களின் மூலமாய்க் கடவுள் நமக்கு ஞான ம புகட்டி, ஸன்மார்க்கப் பயிற்சியில் தேர்ச்சி யடையும் வழியைத் தெரிவிக்கிறார். இவ்வளவு துன்பம் தருவதற்கு காரணம் நம்முடைய குணமும் மணமும் இறைவன் அறியாதவை யென்றல்ல ; நம்மை சிருஷ்டித்த கடவுளுக்கு அவை நன்றாய்த் தெரியும். கடவுள் அப்படிச் செய்வது நம்முடைய நன்மைச்காகவே ஆதலால், நாம் தருமத்தைக் கைப்பிடித்து வாழ்வோம். எவ்விடர்வரினும், பொறுமையைக் கைவிடோம். (*கிரிஸெல்டா*, பக். 39-40)

மேற்கண்டவற்றில் ஆசிரியரின் 'தொனி' அவருடைய படைப்பின் நோக்கத்தை வெளிப்படையாகவே விளம்பரப்படுத்தி யுள்ளதை நாம் அறிவோம். படைப்பின் போக்கிலிருந்து படைப்பினுடைய நோக்கத்தையும் படைப்பாசிரியனின் குறிக் கோளினையும் புரிந்து கொள்வதற்கு இஃதோர் உதாரணமாகும். இவ்வாறு இல்லாமல் கதையாசிரியர்கள் முன்னுரை முகவுரைகளில் தத்தமது நோக்கங்களைக் குறிப்பிட்டு விடுவதும் உண்டு.

> வாழ்க்கை என்பது ஆணுக்கு மாத்திரம் அல்ல. பெண்ணுக்கும் தான் இன்பமும் துன்பமும், காதலும் கோதலும் எல்லாமுமே அப்படித்தான். ஆனால் இளைஞர்கள் உலகிலே பலருக்கு இந்தக் கண்ணோட்டம் இருப்பதில்லை. பெண்களைப் போகப் பொருள்களாய் மாத்திரம் கருதும் மனப்பான்மை பலரிடமும் காணப்படுகிறது. இதன் அநாகரிகத் தன்மையைச் சுட்டிக் காட்டுவதுதான் இந்தக் கதையை எழுதுவதில் என்னுடைய நோக்கம்[93].

என்கிறார் ஒரு கதையாசியர். இப்படிக் கதையாசிரியர்கள் தமது நோக்கங்களை வெளிப்படுத்துகையில் அவற்றைப் படைப்புக்களில் நிறைவேற்றிக்கொள்ளப் பல உத்திகளைக் கைக்கொள்ள வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது மேலே சுட்டிய ஆசிரியரின் நோக்கத்தைக் கதையில் வெளிப்படுத்த வேண்டுமாயின் வேறு எதனைக் காட்டிலும் ஆசிரியர்க்குக் கைக்கொடுப்பது பாத்திரப் படைப்பே ஆகும். ஏனெனில், கதையாசிரியரின் நோக்கம் ஆண்களைப் பற்றியது. அந்நிலையில் *காதலோ காதல்* (1954) என்னும் குறு நாவலில் கல்லூரி மாணவனாகிய சுகுமாரனும் அவனுடைய தோழர்களும் பெண்களைக் காமவெறிக்குத் தீனி போடுபவர்களாகவே கருதிக் கயமைகள் புரிபவர்களாகப் படைக்கப் பெற்றுள்ளனர். கமலா என்கிற ஆசிரியை ஓர் உயரிய படைப்பு. அவளைக் கண்டது முதல்—அவளுடன் பழக நேர்ந்தது முதல் சுகுமாரன் தன் கயமைகளை உதறித்தள்ளிவிட்டு நேர்மையைக் கடை பிடிக்கத் தொடங்குகின்றான். கடைசியில் கமலாவே அவனை விரும்பி ஏற்றுக் கொள்கின்றாள். ஆசிரியர் சுகுமாரனின் மன மாற்றத்தை அடிக்கடி குறிப்பிடுவதற்கும், அவனை இயக்கவியல் ரீதியில் திரிபுநிலை மாந்தனாகப் படைத்திருப்பதற்கும் அடிப்படைக் காரணம் அவர்தம் நோக்கமே ஆகும். இளைஞர்களின் போக்கைப் படம் பிடித்துக் காட்ட வேண்டிய கட்டாயம் ஆசிரியருக்கிருப்பதால் இளைஞர்களின் நடவடிக்கைகள் நாவலில் மிகுந்துள்ளன. அதனாலேயே கதைத் தலைவனுக்கு அதிக இடமும், கதைத் தலைவிக்கும்— பெண்களுக்கும் குறைந்த இடமும் ஒதுக்கப்பெற்றிருக்கின்றன. சுகுமாரனின் முன்னைய போக்கையும் பின்னைய போக்கையும் காட்டும்போது முரண் உத்தி துலக்கமாகின்றது. சுகுமாரனிடம் தோன்றும் பண்புப் பிறழ்ச்சி உளவியல் ரீதியானது. இப்படியோர் இளைஞனை உருவாக்கி நெறி கெட்ட இளைஞர் சமுதாயத்தைத் திருத்த முனைந்துள்ளார் ஆசிரியர்; எனவே தான் ''...பல நாவல் களில் பாத்திரப் படைப்பு நெறிக்கு ஆசிரியர்களின் கொள்கையும் குறிக்கோளும் அடிப்படையாக இருந்து வருவதைக் காண்கிறோம்'' [94] என்பார் டாக்டர் மா. இராமலிங்கம்.

கதையாசிரியனின் நோக்கம் எப்பொழுதும் எப்படைப்பிலும் ஒரே மாதிரியாக இருந்தே ஆகவேண்டும் என்கிற கட்டாயம் இல்லை அப்படி அமையுமாயின் அது கொள்கையாகிவிடுகின்றது. ஆனால், நோக்கம் என்பது கதையாசிரியன் ஒவ்வொரு படைப்பாக்கத்தின் போதும் கைக்கொள்கிற-ஏற்படுத்திக் கொள்கிற ஓர் இலக்காகும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

சென்ற இதழ்த் தொடர்ச்சி

# தொல்காப்பியம் செய்யுளியல் காண்டிகையுரை

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

"மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணம் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே;"
(படர்க்கைப் பரவலாய்த் தாழிசை அடிநிமிர்ந்து வந்தது)

"மழைநுழைந்து புறப்பட்ட மதியமு ஞாயிறுப்போ
லுழைவழங்கு வலம்புரியுந் திகிரியு மொலிசிறப்பப்
பச்சென்ன வானிட்ட வில்லேபோற் பசுந்துழாய்க்
கச்சென்னக் கனல்கின்ற கதிர்முலைமேற் கவின்செய்ய
வம்மேகத் திடைப்பிறந்த நரையுருமே றதிசயிப்ப
மைம்மேனி மருங்கதிர வரியேறு வால்புடைப்ப
விண்டோயு மணிநீல வெற்பிடை வேய்மிடைந்தாங்
கெண்டோளு மிடுநீழ லிளங்கிளிகள் களிகூரக்
கொதியாது கொதித்தெறிந்தகோட்டெருமைத்தலையின்மிசை
மிதியாத சீறடி மிதித்தன போற்றோன்றத்
தாங்கிய புகர்வாளுங் கேடகமுந் தனித்தனி
வாங்கிய கோளரவு மதியமும் போன்றிலங்க
மைதொடுத்த கடற்புறஞ்சூழ் மலையென்ன மனியல்குல்
கொய்துடுத்த பொற்றுகிலின் கொழுஞ்சோதிக்
கொழுந்தோட்ட
நீனின்ற வடிவொத்த னெடியோனை முதற்பயந்த
தாயென்று முதுமறை பரவினும்
யாயென் றல்ல தியாந்துணி யலமே"
(தரவு அடிநிமிர்ந்து வந்தது.)

"பூணாக வென்பணிந்தான் பூதத்தான் வேதத்தான்
கோணாகக் கச்சையான் கோடேந்து கொல்லேற்றான்
மாணாக வெண்ணூலான் வாணுதலோர் பாகங்கொண்
டுணாகும் பிச்சையா னுண்ணாத நஞ்சுண்டான்
வான்யாறு தாழ்ந்த சடையான் மழுவலத்தான்
யானார்வஞ் செய்யு மிறை;

எனவாங்குப் பாடி யிறைஞ்சுவோர்க் கெல்லாம்
வினைமாசு தீர விளக்காகுந் தோற்றத்

தனையோய் மறலிக்கு மச்சம் பயந்த
புனைபூங் கழற்கான்மேற் பூவோடு நீர்தூ உய்
மனைமாண்ட பாக முளப்பட வாழ்த்தி
யெனைநாளு மேத்துது மெந்தையே நின்னை
நினையா தொழியற்க நெஞ்சு" ... ... ... ... ...

(தரவு இணைந்து வந்தது)

"முழங்குதிரைக் கொற்கைவேந்தன்
முழுதுலக மேவல்செய மொழிசெய் கோமான்
வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன்
றாக்கரிய வைவேல் பாடிக்
கலங்கிநின் றாரெலாங் கருதலா காவண
மிலங்குவா ளிரண்டினா லிருகைவீ சிப்பெயர்ந்
தலங்கன்மா லையவிழ்ந் தாடவா டும்மிவள்,
பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின் றாரெலாம்
விலங்கியுள் ளந்தப விளிந்துவே றாபவே"

இது மக்களைப் பரவி வந்தது.

"ஆறறி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரந் தீமடுத்துக்
கூறாமற் குறித்ததன்மேற் செல்லுங் கூடுங்கூளி
மாறாப்போர் மணிமிடற்ற வெண்கையாய் கேளினி;

படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி யாடுங்காற் கோடுய ரகலல்குற்
கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ

மண்டமர் பலகடந்து மதுகையா னீறணிந்து
பண்டரங்க மாடுங்காற் பணையெழி லணைமென்றோள்
வண்டரற்றுங் கூந்தலாள் வளர்தூக்குத் தருவளோ

கொலையுழுவைத் தோலசைஇக் கொன்றைத்தார்
சுவற்புரளத்

தலையங்கை கொண்டுநீ காபால மாடுங்கான்
முலையணிந்த முறுவலாள் முற்பாணி தருவாளோ;

எனவாங்கு,
பாணியுந் தூக்குஞ் சீரு மென்றிவை
மாணிழை யரிவை காப்ப
வாணமில் பொருளெமக் கமர்ந்தனை யாடி"

(ஒத்தாழிசைபோல் வந்த) தேவபாணிக் கொச்சகம்,

மா மலர் முண்டகம் தில்லையோடு ஒருங்கு உடன்
கானல் அணிந்த உயர் மணல் எக்கர்மேல்,
சீர் மிகு சிறப்பினோன் மரமுதல் கை சேர்த்த
நீர் மலி கரகம் போல் பழம் தூங்கு முடத் தாழைப்
பூமலர்ந் தவைபோல, புள் அல்கும் துறைவ ! கேள்;

'ஆற்றுதல்' என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;
'போற்றுதல்' என்பது புணர்ந்தாரைப் பிரியாமை ;
'பண்பு' எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல் ;
'அன்பு' எனப்படுவது தன் கிளை செறா அமை ;
'அறிவு' எனப்படுவது பேதையார் சொல் நோன்றல் ;
'செறிவு' எனப்படுவது கூறியது மறா அமை ;
'நிறை' எனப்படுவது மறை பிறர் அறியாமை;
'முறை' எனப்படுவது கண்ணோடாது உயிர் வெளவல்;
'பொறை' எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்;
ஆங்கு அதை அறிந்தனிர் ஆயின், என் தோழி
நல் நுதல் நலன் உண்டு துறத்தல் கொண்க!

தீம் பால் உண்பவர் கொள் கலம் வரைதல்
நின் தலை வருந்தியாள் துயரம்
சென்றனை களைமோ ; பூண்க, நின் தேரே!

(தாழிசையும் தனிச்சொல்லுமின்றித் தரவும் எண்ணும் சுரிதகமும் பெற்று அகப்பொருட்டாய் வந்தது)

'பால்மருள் மருப்பின், உரல்புரை பாஅ அடி,
ஈர் நறுங் கமழ் கடாஅத்து, இனம்பிரி ஒருத்தல்
ஆறுகடி கொள்ளும் வேறுபுலம் படர்ந்து,
பொருள்வயிற் பிரிதல் வேண்டும்' என்னும்
அருள் இல் சொல்லும், நீ சொல்லினையே,
நன்னர் நறுநுதல் நயந்தனை நீவி,
'நின்னின் பிரியலன், அஞ்சல் ஓம்பு' என்னும்
நன்னர் மொழியும் நீ மொழிந் தனையே :
அவற்றுள், யாவோ வாயின ?—மாஅல் மகனே :
'கிழவர் இன்னோர்' என்னாது, பொருள் தான்,
பழவினை மருங்கின் பெயர்புபெயர்பு உறையும் ;
அன்ன பொருள்வயிற் பிரிவோய்-நின் இன்று
இமைப்புவரை வாழாள் மடவோள்
அமைக்கவின் கொண்ட தோள்இணை மறந்தே.

செவ்விய தீவிய சொல்லி, அவற்றொடு
பைய முயங்கிய அஞ்ஞான்று, அவை எல்லாம்
பொய்யாதல் யான்யாங்கு அறிகோ மற்று ?—ஐய !—
அகல்நகர் கொவ்வா அலர்தலைத் தந்து,
பகல்முனி வெஞ்சுரம் உள்ளல் அறிந்தேன் ;
மகன் அல்லை மன்ற, இனி.

செல் ; இனிச் சென்றுநீ செய்யும் வினை முற்றி,
அன்புஅற மாறி. 'யாம் உள்ளத் துறந்தவள்
பண்பும் அறிதிரோ ?' என்று. வருவாரை
என் திறம் யாதும் வினவல் ; வினவின்,
பகலின் விளங்குநின் செம்மல் சிதைய,
தவல்அருஞ் செய்வினை முற்றாமல், ஆண்டுஓர்
அவலம் படுதலும் உண்டு.

நிரைதிமில் களிறாக, திரைஒளி பறையாக,
கரைசேர் புள்ளினத்து அம்சிறை படையாக,
அரைசுகால் கினர்ந்தன்ன உரவுநீர்ச் சேர்ப்ப! கேள்:
கற்பித்தான் நெஞ்சு அழுங்கப் பகர்ந்துஉண்ணான்,
விச்சைக்கண்
தப்பித்தான், பொருளேபோல், தமியவே தேயுமால்,
ஒற்கத்துள் உதவியார்க்கு உதவாதான்; மற்று அவன்
எச்சத்துள் ஆயினும், அஃது எறியாது விடாதே காண்.
கேளிர்கள் நெஞ்சுஅழுங்கக் கெழுவுற்ற செல்வங்கள்
தாள்இலான் குடியேபோல், தமியவே தேயுமால்,
சூள் வாய்த்த மனத்தவன் வினைபொய்ப்பின் ; மற்று அவன்
வாள்வாய் நன்று ஆயினும், அஃது எறியாது விடாதே காண்.
ஆங்கு—

அனைத்து, இனி பெரும ! அதன் நிலை ; நினைத்துக் காண்:
சினைஇய வேந்தன் எயிற்புறத்து இறுத்த
வினைவரு பருவரல் போலத்
துணைவரு நெஞ்சமொடு வருந்தினள் பெரிதே. எனவரும்.

சூ. 150 : ஒருபான் சிறுமை இரட்டியத னுயர்பே

கருத்து : கொச்சக ஒரு போகிற்கு அடியளவு பற்றிய சிறுமை பெருமை கூறுகின்றது.

உரை : கொச்சக ஒருபோகுச் செய்யுளின் அடியளவு சிறுமை ஒருபஃது பெருமை இருபஃதடி ஆகும்.

இவ்வரையறை அடக்கியலின்றி அடிநிமிர்ந்தொழுகும் தரவிற்கெனக் கொள்க.

எ-டு :- ''தடங்கடற் பூத்த தாமரை மலராகி
யடங்காத முரற்சியா னருமறை வண்டிசைப்ப
வாயிர வாராழி யவிரிதழின் வெளிப்பட்ட
சேயித ழெனத்தோன்றுஞ் செம்பகலி னிரவகற்றிப்
படுமணிப் பகைநீங்கப் பருவத்து மழையானே
நெடுநிலங் குளிர்கூர நீர்மைசா விழனாறி
யண்டங்கள் பலபயந்த வயன்முதலா மிமையோரைக்
கொண்டங்கு வெளிப்படுத்த கொள்கையை யாதலி
னோங்குயர் பருதியஞ் செல்வநின்
னீங்கா வுள்ள நீங்கன்மா ரெமக்கே'' எனவரும்.

சூ 151: அம்போ தரங்கம் அறுபதிற் றடித்தே
செம்பால் வாரம் சிறுமைக் கெல்லை.

கருத்து : அம்போதரங்க ஒருபோகிற்கு அடிபற்றிய சிறுமை பெருமை கூறுகின்றது.

உரை : அம்போதரங்க ஒருபோகுச் செய்யுட்குப் பெருமை அறுபது அடி அதனிற் செப்பாதியாக வரும் முப்பதடி, சிறுமைக் களவு ஆகும்.

செம்பால் = நேர்பாதி, வாரம் = வருதல்

செப்பாலும் அதன் வாரமும் எனக் கொண்டு சிறுமைக்கெல்லை பதினைந்தடி என்பார் பேராசிரியர். அம்போதரங்க ஒரு போகிற் குரிய உறுப்பாக மேற்கூறும் விதியை நோக்கின் பதினைந்தடிச் சிற்றெல்லை பொருந்தாமை போதரும்.

சூ 152 :- எருத்தே கொச்சகம் அராகம் சிற்றென்
அடக்கியல் வாரமொ டந்நிலைக் குரித்தே

கருத்து :- அடியளவு அதிகாரப்பட்டமையின் முன்னூற்பாவான் அடியளவு கூறி இந்நூற்பாவான் அதுபெறும் உறுப்புக்கள் கூறுகின்றார்.

உரை : தரவும் கொச்சகமும் அராகமும் சிற்றெண்ணும் அடக்கியலாகிய வாரமும் ஆகிய உறுப்புக்கள் பெற்று வருதற்கு மேற்கூறிய அம்போதரங்க ஒரு போகுச் செய்யுள் உரியதாகும்.

கொச்சகமாவது : தாழிசையின் வேறுபட்டு வெண்பாவாகவும் வெண்பாவினை ஒத்தும் தழுவோசையின்றி வரும் இடைநிலைப் பாட்டு. இஃது அடுக்கியும் அடுக்காதும் வரும்.

எண் ; என்னாது சிற்றெண் என்றதனால் இருசீரடி அம்போதரங்கமே கொள்க.

'அந்நிலைக்குரித்து' என்றதனாற் றனிச்சொல் வருதலும் கொள்க.

எ-டு :- "செஞ்சுடர் வடமேரு விருமருங்குந் திரிகின்ற
வெஞ்சுடரு மதியமும்போல் வேலொடுகே டகஞ்சுழல
மாயிரு மணிப்பிலீ மயிலெருத்திற் றோன்றுங்காற்
சேயொளி கடற்பிறந்த செந்தீச் சிறந்தெறிப்ப
மறுவருந்தம் மனத்துவகைக் கலுழ்ச்சியான் வளர்த்தெடுத்த
வறுவருந்தம் முலைசுரந்தாங் ககல்விசும்பு சிலதுவற்ற
ஓருருவத் தெயின்மூன்று மொருங்களித்தோன் வியப்பெய்த
ஈருருவத் தொருபெருஞ்சூர் மறுங்கறுத்த விகல்வெய்யோய்

(இஃது எட்டடியான் வந்த தரவு)

ஆங்க, வினையொழி காலத்து வெவ்வெயிற் கோலத்
தனைவருத் தத்த மறம்புரிந் தாங்கு
முனையடு கொற்றத்து முன்னான் குருவிற்
கனைகடல் சுட்டன கண்;

தேவரு மக்களுஞ் சீற்றத்தா னஞ்சாமைக்
காவல் புரியுங் கதிர்மதி போலு
மூவிரு தோன்றல் முகம்;

மடமகள் வள்ளி மணிக்கம் பலம்போ
லிடையிடை சுற்றுத லின்றுந் தவிரா
தொடையமை தார்கடம்பன் றோள் ;

அவ்வழி, யடியிணை சேரா வவுணரை நுங்கிப்
பொடிப்பொடி யாகிப் பொருப்பொடு மாய
விடியுமிழ் வானத் திடைநின்று கூஉங்
கொடியணி கோழிக் குரல் ;

விழுச்சீரமரர் விசும்பிடைத் தோன்றிப்
பழிச்சிநின் றார்த்தார் பலர் ;
(இவை ஐந்தும் வெண்பா நடையாக வந்த கொச்சகம்

உருகெழு முருமிய வுருமென வதிர்தொறு
மருகெழு சிறகொடு மணவரு மணிமயில் ;

பெருகிய வருமறை பெறுநெடு மொழியொடு
பொருகள வழியிசை புகல்வன சிறுகுறள் ;
(இவை இரண்டும் அராகம்)

சிவந்தன தசை
சிலம்பின மலை
நிவந்தன தலை
நிரம்பின குறை
ஆர்த்தன மறை
ஆடினர் பலர்
போர்த்தன துகள்
பொழிந்தனர் மலர்
(இவை இருசீரடி எட்டம்போதரங்கம்) சிற்றெண்.

ஆங்கனந் தோன்றிய வடுபோர் வென்றியின்
வீங்கிருந் தொடித்தோள் விடலை நினக்கே
யாமறி யஃஉவையிற் றமிழ்புனைந் தேத்துக
நின்ன தக்க தாயினு நின்னெதிர்
நானில மாக வேண்டும் யாணர்க்
கடம்புங் களிமயிற் பீலியுந் தடஞ்சுனை
நீரோடு நின்வயின் மாந்தர்
வாராப் புலமை வருகமா ரெமக்கே"

(இஃது தரவொடொத்து எட்டடியான் வந்த ஆசிரியச்சுரிதகம்
இது நாற்பத்துநான்கடியான் வந்தது )

(130 ஆம் சூத்திர முதலாக 152 ஆம் சூத்திரம் வரை ஒத்தாழிசைக் கலிப்பாவின் இலக்கணம் கூறினார். இனி ஏனைக் கலிப்பாக்களை முறையானே கூறுவார்).

சூ. 153. :- ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலான்
திரிபின்றி முடிவது கலிவெண் பாட்டே

கருத்து : நிறுத்த முறையானே கலிவெண்பாவின் இலக்கணம் கூறுகின்றது.

உரை: ஒரு பொருளைக் கருதிய இயல்பினான் நிறைந்து வெண்பா அடியினது இலக்கணத்தான் திரிபின்றி முடிவது கலிவெண்பாட்டாகும்.

'நுதலிய இயலானென்றும்', 'வெள்ளடி இயலானென்றும்' தனித்தனி கூட்டிமுடிக்க.

பொருள் என்றது: அகமும் புறமுமாகிய பொருளையும் கலியுறுப்புக்களையுமாம். பொருள் எனினும் மெய் எனினும் ஒக்கும் இவ்ஆசிரியர் கலியுறுப்புக்களை 'மெய்' என ஓதுதலை ஐஞ்சீரடுக்கியும் "ஆறு மெய் பெற்றும்" (சூ-154) என்பதனான் அறியலாம். ஈண்டுப் பொருளென்றது இரட்டுற மொழிதல்,

அதனான் அவை இருவகையான் வருங்கால் அவற்றுள் ஒவ்வொன்றையே கருதி வர வேண்டுமென்பாராய் 'ஒரு பொருள் நுதலிய என்றார். அஃதாவது வாழ்த்தியல் முதலாகப் எல்லாப் பொருள் மேலும் வரும்நெடுவெண்பாட்டினைப் போலாது, அகத்திணை ஒன்றையே பற்றியும், தரவுறுப்புப் போல ஓரே உறுப்புப் பற்றியும் வருதல் இதன் இலக்கணமாம்.

வெள்ளடியான் என்னாது வெள்ளடிஇயலான் என்றமையின் ஒரோஅடி பிறதளையான் வரினும், ஒரோவழி ஐஞ்சீரடி வரினும் இலக்கணமாகக் கொள்க.

ஒருபோகு கொச்சகம் முதலியவற்றைப் போல ஆசிரியத்தானும், வெண்பாவானும் சுரிதகம் பெற்றும் மண்டலித்தும் முடியாது வெண்பாட்டீற்றடி போல முடியுமென்பார் "திரிபின்றி முடிவது" என்றார் என உணர்க.

இதன் பெருமைக்கு அடிவரையறை இல்லை (சூ-160) என்பதனான் சிறுமைக்களவு உய்த்துணரப்படும்.

அஃதாவது ஒத்தாழிக்கலிப்பாவின் தரவிற்குப் பன்னிரண்டடியும் வண்ணகத்திற்கு எட்டடியும் எல்லை கூறினமையான் அவற்றிற்கு இடைப்பட்ட பத்தடி இதன் சிறுமைக்கு எல்லையாகக் கொள்க.

இனி இந்நூற்பாவின்கண் "முடிவது" என்றுள்ள பாடத்தை 'வருவது' எனக் கொண்டும் கொச்சகக்கலிப்பாவிற்குரிய இலக்கண நூற்பாவின் (சூ-154) முதன் மூன்றடிகளைத் துணித்து அவையும் கலிவெண்பாட்டிற்கே இலக்கணம் கூறுவதாகவும் கொண்டு பேராசிரியர் உரை கூறியுள்ளார்.

அவ்வுரை கலிவெண்பாட்டிற்குரிய இலக்கணம் இது என வரையறை செய்யாமல் மயங்க வைப்பதையும் கவர்பொருள் மலிந்து தடுமாறச் செய்வதையும் காணலாம். அவற்றின் பொருந்தாமையை விரிப்பின் பெருகும் என்க.

எ-டு :- ''மரையா மாலகவர்'' (கலி-6) என்பது
பதினோரடியான் வந்தது
''சுடர்த்தொடீ கேளாய்'' (கலி-51) என்பது
பதினாறடியான் வந்தது
''கயமலருண்கண்ணாய்'' (கலி-37) என்பது
இருபத்திரண்டடியான் வந்தது.
''தீம்பால் கறந்த'' (கலி-111) என்பது
இருபத்துநான்கடியான் வந்தது.

இனித் ''தீம்பால் கறந்த'' என்னும் முல்லைக்கலியுள் ''பூங்கரைநீலம் புடைதாழ மெய்யசைஇ ப்பாங்கரும்'' என ஐஞ்சீரடியும், ''குருந்தம்பூங் கண்ணிப் பொதுவன்மற் றென்னை முற்றிழை ஏஎர்'' என ஆசிரியத்தளையும், இடுமுள் நெடுவேலி (கலி-12)என்னும் கலிவெண்பாட்டினுள்''நெறி மயங்குற்ற நிரம்பா + நீடத்தம் + சிறுநனி நீதுஞ்சி ஏற்பினும் அஞ்சும்'' என ஆசிரியத் தளையும் கலித்தளையும் வந்தவாறு காண்க

இனி, இக்கலிவெண்பா அடுக்கியும் சுரிதகம் முதலாய உறுப் பொடு கூடியும் வரின் அவை எல்லாம் பின்வரும் கொச்சகக்கலி யின்பாற்படும் என்றுணர்க.

சூ 154 :- தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்தும்
ஐஞ்சீ ரடுக்கியும் ஆறுமெய் பெற்றும்
வெண்பா இயலான் வெளிப்படந் தோன்றும்
பா நிலை வகையே கொச்சகக் கலியென
நூனலில் புலவர் நுவன்றறைந் தனரே.

கருத்து : நிறுத்த முறையானே கொச்சகலி இலக்கணமாமாறு கூறுகின்றது.

உரை : முதலுறுப்பாகிய தரவும் இறுதி உறுப்பாகிய சுரிதகமும் இடைநிலைப்பாட்டு என்னும் தாழிசையும் இடைமிடைந்தும், ஐஞ்சீராய் அடுக்கிய அடியும், தரவு தாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் என்னும் ஆறு உறுப்புப் பெற்றும் வெண்பாவிற்குரிய நடையான் செவ்விதின் தோன்றும்

பாநிலையையும், அவற்றின் வகையினையும் செய்யுள் இலக்கணத்தை நவின்ற புலவோர் கொச்சகக்கலியெனக் கூறி விளக்கினர்.

பாட்டிடை மிடைந்தும் என்றதனான் அராகமும் எண்ணும், தனிச் சொல்லும் இடையே வருமென்றும் அவை முறையாயும் முறை மயங்கியும் வருமென்றும் கொள்க.

ஆறு மெய்பெற்றும் என்றதனான் ஐந்தும் நான்கும் பெறுதல் அதனுள் அடங்கும் எனக் கொள்க.

ஐஞ்சீரடி என்னாது அடுக்கியும் என்றதனான் அவை முடுகி வரினும் ஆம் எனக் கொள்க. பாநிலையும், வகையும் என உம்மை விரித்து எண்ணுக. வகையே என்ற ஏகாரம் எண்ணேகாரம்.

வெண்பாவியலான் என்றது ஏழு எழுத்து முதல் பதினான் கெழுத்தனவும் வரும் நாற்சீரடியான் வருதலையும், வெண்டளை வருதலையும் சுட்டிநின்றது.

இதனானே இடையிடையே கொச்சகவெண்பாக்கள் விரலி வருதலும் கொள்க.

இங்ஙனம் உறுப்புக்கள் மிக்கும் குறைந்தும் மயங்கியும் வருமேனும் பொருளானும் ஓசையானும் உறுப்பானும் இது கொச்சகக்கலியென்பது விளங்கித் தோன்றுமென்பார்'' வெளிப்படத் தோன்றும்'' என்றார்.

கொச்சக ஒருபோகு தெற்றென விளங்கிநில்லாமை கருதி முன்னர் ஒப்பநாடி உணர்தல் வேண்டுமென்றதையும் உன்னுக. நுவன்றைதலாவது விளக்கிக் கூறுதல்.

எ.டு சான்றவிர், வாழியோ! சான்றவிர்! என்றும்
பிறர்நோயும் தம்நோய்போல் போற்றி, அறன் அறிதல்
சான்றவர்க்கு எல்லாம் கடன்ஆனால், இவ் இருந்த
சான்றீர்! உமக்குஒன்று அறிவுறுப்பேன்: மான்ற
துளிஇடை மின்னுப்போல் தோன்றி, ஒருத்தி,
ஒளியோடு உருஎன்னைக் காட்டி, அளியள், என்
நெஞ்சுஆறு கொண்டாள்; அதற்கொண்டும் துஞ்சேன்,
அணிஅலங்கு ஆவிரைப் பூவோடு எருக்கின்
பிணையல்அம் கண்ணி மிலைந்து, மணிஆர்ப்ப,
ஓங்குஇரும் பெண்ணை மடல் ஊர்ந்து, என்

எவ்வநோய்

தாங்குதல் தேற்றா இடும்பைக்கு உயிர்ப்பாக
வீங்குஇழை மாதர் திறத்துஒன்று, நீங்காது,
பாடுவேன், பாய்மா நிறுத்து.
யாமத்தும் எல்லையும் எவ்வத் திரை அலைப்ப,
'மா மேலேன்' என்று, மடல்புணையா நீந்துவேன்—
தேமொழி மாதர் உறாஅது உறீஇய
காமக் கடல்அகப் பட்டு.

உய்யா அருநோய்க்கு உயவாகும்—மையல்
உறீஇயாள் ஈத்தஇம் மா.
காணுநர் எள்ளக் கலங்கித், தலைவந்து, என்
ஆண்எழில் முற்றி உடைத்துஉள் அழித்தரும்—
'மாண்இழை மாதராள் ஏஎர்' எனக், காமனது
ஆணையால் வந்த படை,

காமக் கடும்பகையில் தோன்றினேற்கு ஏமம்—
எழினுதல் ஈத்தஇம் மா.

அகைஎரி ஆனாதுஎன் ஆர்உயிர் எஞ்சும்
வகையினால், உள்ளம் சுடுதரும் மன்னோ—
முகைஏர் இலங்குஎயிற்று இன்நகை மாதர்
தகையால் தலைக்கொண்ட நெஞ்சு !

அழல்மன்ற, காம அருநோய் ; நிழல்மன்ற,
நேரிழை ஈத்தஇம் மா.
ஆங்கு அதை,

அறிந்தனிர் ஆயின், சான்றவிர் ; தான் தவம்
ஒரீஇ, துறக்கத்தின் வழீஇ, ஆன்றோர்
உள்இடப்பட்ட அரசனைப் பெயர்த்து, அவர்
உயர்நிலை உலகம் உறிஇயாங்கு, என்
துயர்நிலை தீர்த்தல் நும்தலைக் கடனே (நெய்தற்கலி)

இது தரவும் போக்கும் உடையதாய் கொச்சக வெண்பாக்கள் விரவி வந்த கொச்சகக்கலி.

அரிதினின் தோன்றிய யாக்கை புரிபுதாம்
வேட்டவை செய்துஆங்குக் காட்டி மற்று ஆங்கே,
அறம் பொருள் இன்பம்என்று அம்மூன்றின் ஒன்றன்
திறம்சேரார் செய்யும் தொழில்கள் அறைந்தன்று—
அணிநிலைப் பெண்ணை மடல் ஊர்ந்து, ஒருத்தி
அணிநலம் பாடி வரற்கு.

ஓரொருகால் உள்வழியள் ஆகி, நிறைமதி
நீருள் நிழல்போல், கொளற்கு அரியள்—போருள்
அடல்மாமேல் ஆற்றுவேன் என்னை மடல்மாமேல்
மன்றம் படர்வித்தவள்
வாழி, சான்றீர் !

பொய்தீர் உலகம் எடுத்த கொடிமிசை,
மைஅறு மண்டிலம் வேட்டனள்—வையம்
புரவுஊக்கும் உள்ளத்தேன் என்னை இரவுஊக்கும்
இன்னா இடும்பைசெய் தாள்
அம்ம, சான்றீர் !

கரந்தாங்கே இன்னாநோய் செய்யும்; மற்று இஃதோ—
பரந்த சுணங்கின் பணைத் தோளாள் பண்பு ?

இடிஉமிழ் வானத்து, இரவு இருள் போழும்
கொடிமின்னுக் கொள்வேன் என்றன்னள்-வடி நாவின்
வல்லார்முன் சொல்வல்லேன் என்னைப் பிறர்முன்னர்க்
கல்லாமை காட்டியவள்
வாழி, சான்றீர் !

என்று, ஆங்கே,

வருந்த மாஊர்ந்து, மறுகின்கண் பாட,
திருந்திழைக்கு ஒத்த கிளவிகேட்டு, ஆங்கே,—
பொருந்தாதார் போர்வல் வழுதிக்கு அருந்திறை
போலக் கொடுத்தார், தமர் (நெய்தற் கலி)

இது வெள்ளைச்சுரிதமாய் இடையே வாழிசான்றீர், அம்ம சான்றீர் எனச் சொற்சீரடிகள் பெற்று வெண்பாவியலான் வந்த கொச்சகக்கலி.

"புரிவுண்டபுணர்ச்சியுள்" என்னும் நெய்தற் கலிப்பாட்டினுள் கலித்தளையும் ஐஞ்சீரடியும் வந்தன (கலி-142)

மின்னொளிர் அவிரறல்" (கலி-55) என்னும் குறிஞ்சிக்கலி, ஆசிரியத்தளையும் அளவெண் ஆசிரிய அடியொடு விரவி, இகந்து தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றுவந்த கொச்சகக்கலி.

"காமர் கடும்புனல்" (கலி-39) ஆறுறுப்பும் மயங்கி வந்த கொச்சகக்கலி.

காலவை, சுடுபொன்வளைஇய (கலி.85) என்னும் மருதக்கலி தரவும் போக்குமின்றி ஐஞ்சீரடி விரவிவந்த கொச்சகக்கலி.

பிறவும் வேறுபட்டுவரும் கொச்சகக்கலிகளைக் கலித்தொகையு யுள் கண்டு கொள்க.

இச்சூத்திரத்தை இரண்டாக்கிப் பேராசிரியர் கூறும் உரைக் கருத்துக்கள் நூல்நெறிக்கு ஒவ்வாமையை அவருரையே நோக்கித் தெளிக. விரிப்பின் பெருகும்.

சூ 156 :- கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்
போக்கின் றாதல் உறழ்கலிக் கியல்பே.

கருத்து :- நிறுத்தமுறையானே உறழ்கலியாமாறு அதன் இலக்கணங் கூறுகின்றது.

உரை : கொச்சகக்கலிக்கு ஓதியவாறன்றி ஒருவர் ஒன்றைச் செப்புதலும் மற்றவர் அதற்கு மறுமாற்றங் கூறுதலுமாகிய நேர்க் கூற்றுக்கள் இடையிடையே தொகுக்கப்பெற்றும் சுரிதகமின்றிப் பொருந்தும் பிற உறுப்புக்களான் ஆகி வருதல் உறழ்கலிக்கு இலக்கணமாகும். இடையிடை மிடைந்தும் என்னும் உம்மை ஏற்புடைய பிற உறுப்புக்களைச் சுட்டி நின்றமையின் எச்சஉம்மை.

சிறுபான்மை சுரிதக உறுப்பமைய வருமேனும் அச்சுரிதகம் போக்கியலுக்குரிய பொருண்மை முற்றநில்லாமை நோக்கிப் "போக்கின்று" என்னாது "போக்கின்றாதல்" என்றார். 'போக்கியல் என்பது கடை' குறைந்து போக்கென நின்றது.

(எ-டு) சுணங்குஅணி வனமுலை, சுடர்கொண்ட நறுநுதல்,
மணம்கமழ் நறுங்கோதை மாரிவீழ் இருங்கூந்தல்,
நுணங்குஎழில், ஒண்தித்தி, நுழைநொசி மடமருங்குல்,
வணங்குஇறை வரிமுன்கை, வரிஆர்ந்த அல்குலாய்.

'கண்ஆர்ந்த நலத்தாரைக் கதுமெனக் கண்டவர்க்கு
உள்நின்ற நோய்மிக, உயிர்எஞ்சு துயர்செய்தல்
பெண்அன்று, புனையிழாய்! எனக்கூறித் தொழூஉம்;
தொழுதே,
கண்ணும் நீராக நடுங்கினன், இன் நகாய்!
என்செய்தாள் கொல்லோ—இஃதுஒத்தன் தன்கண்
பொருகளிறு அன்ன தகைசாம்பி உள்உள்
உருகுவான் போலும், உடைந்து?

தெருவின்கண்; காரணம் இன்றிக் கலங்குவார்க் கண்டுநீ,
வாரணவாசிப் பதம்பெயர்த்தல், ஏதில
நீநின்மேல் கொள்வது ; எவன்?

'அலர்முலை ஆய்இழை நல்லாய் ! கதுமென,
பேர்அமர் உண்கண் நின் தோழி உறீஇய
ஆர்அஞர் எவ்வம் உயிர் வாங்கும் ;
மற்றுஇந் நோய்தீரும் மருந்துஅருளாய், ஒண்தொடீ !

நின்முகம் காணும் மருந்தினேன்' என்னுமால்;
நின்முகம் தான்பெறின் அல்லது, கொன்னே
மருந்துபிறிது யாதும் இல்லேன், திருந்திழாய் !
என்செய்வேம் கொல்இனி நாம் ?
பொன் செய்வாம்.

ஆறு விலங்கித் தெருவின்கண்நின்று ஒருவன்
கூறும்சொல் வாய்எனக் கொண்டு, அதன் பண்பு
உணராம்,
'தேறல், எளிது'என்பாம் நாம்.

'ஒருவன்; சாம்ஆறு எளிது' என்பாம், மற்று.

சிறிது, ஆங்கே—'மாணாஊர் அம்பல் அலரின்
அலர்க' என,
நாணும் நிறையும் நயப்புஇல் பிறப்புஇலி.

பூண் ஆகம் நோக்கி இமையான், நயந்து, நம்
கேண்மை விருப்புற் றவனை, எதிர்நின்று,
நாண்அடப் பெயர்த்த நயவரவு இன்றே

இது தரவுடைத்தாய்க் கூற்றும் மாற்றமும் இடையிடைமிடைந்து போக்கியலின்றி வந்த உறழ்கலி.

"ஒருஉநீ எங்கூந்தல்" (கலி-87) என்பது தரவும் போக்குமின்றிச் சொற்சீரடி பெற்று வெண்பாவியலான் வந்தது.

"நலமிகநந்திய" (கலி-113) என்னும் பாட்டு ஓதிய இயல்பிற்கு வேறுபட்ட தரவும் சுரிதகமும் கொச்சகவெண்பாவும் பெற்று வந்த உறழ்கலி.

"வாரிநெறிப்பட்டு" (கலி-114) என்னும் பாடல் தரவும் போக்கியலும் பெற்று மறுமாற்றமின்றிக் கூற்றிடைத்தாய் வந்த உறழ்கலி.

பிறவாற்றான் வரும் உறழ்கலிகளைச் சான்றோரிலக்கியம் நோக்கி அறிக.

இதுகாறும் (105-156) பா என்னும் செய்யுளுறுப்புக்குரிய இலக்கணங்(சூ-105) கூறி அவ்வுறுப்பானே அவ்வப்பெயர் பெற்று

வழங்கும் நால்வகைப் பாவிற்கும் அவற்றின் வகைகளுக்கும் உரிய இலக்கணங்களை வகுத்தும் விரித்தும் கூறினார் ஆசிரியர். இனி அளவியல் கூறத் தொடங்குகின்றார்.

சூ. 157 ஆசிரியப் பாட்டின் அளவிற் கெல்லை
ஆயிர மாகும் இழிபு மூன்றடியே

கருத்து : நிறுத்தமுறையானே அளவு என்னும் செய்யுளுறுப்புக் கூறுகின்றது.

உரை : ஆசிரியப்பாட்டின் பெருமைக்கு அடியளவு ஆயிர மாகும், சிற்றெல்லை மூன்றடியாகும்.

அடி என்பதனை ஆயிரத்தொடும் கட்டுக. பின்னர் 'இழிபு மூன்று' என்றதனான் முன்னர் ஆயிரம் என்பது பெருக்கத்தை உணர்த்திற்று.

எ-டு நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே
(ஐங். கடவுள் வாழ்த்து)

இது மூன்றடிச் சிற்றெல்லையான் வந்த ஆசிரியப்பாட்டு.

மலைபடுகடாம் 583 அடிகளான் வந்தது.

ஆயிரத்தளவும் வந்த பாட்டு இக்காலத்தரிய. வந்துழிக் கொள்க.

ஆசிரியநடைத்தே வஞ்சி (சூ-104) என்றமையான் ; ஒப்பின் முடித்தல் என்னும் உத்திவகையான் வஞ்சிப்பாவிற்கும் இவையே அளவாகக் கொள்க.

(எ-டு) மந்தாநிலம் மருங்கசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தர
செந்தாமரை நாண்மலர்மிசை
எனவாங்கு
இனிதின் ஒதுங்கிய இறைவனை
மனமொழி மெய்களின் வணங்குதும் மகிழ்ந்தே.

இது மூன்றடிச் சிறுமையான் வந்த வஞ்சிப்பா. மதுரைக்காஞ்சி 782 அடிகளான் வந்தது. பிறவும் வந்துழிக் கண்டு கொள்க.

சூ. 159: நெடுவெண்பாட்டு முந்நாலடித்தே
குறுவெண்பாட்டிற் களவெழு சீரே

கருத்து : வெண்பாவிற்குச் சிறுமையும் பெருமையுமாகிய அளவு கூறுகின்றது.

உரை : வெண்பாவின் பேரளவிற்கு எல்லை ஏழு அடிக ளாகும். சிற்றளவிற்கு எல்லை ஏழுசீர்களாகும்.

வெண்பாட்டின் நெடுமைக்கும் வெண்பாட்டின் குறுமைக்கும் எனவும் மாறுக. அன்றி நெடுவெண்பாட்டினையும் (பஃறொடை வெண்பா) குறுவெண்பாட்டினையும் (குறள் வெண்பா) குறித்த தாகப் பொருள் கூறின், ஏனைய நேரிசை இன்னிசை வெண்பாக் களையும் விதந்து கூறல் வேண்டும். அங்ஙனம் கூறாமையின் இவ்வாறு பொருள் கோடலே நூல்நெறிக்கொத்ததென்க.

வெண்பாட்டீற்றடி முச்சீர்த்தாகும் (சூ - 69) என்றமையான், ஏழுசீர் என்றது நான்கும் மூன்றுமாய் வருமென அறிக. முந்நாலடித்தென்றது உம்மைத் தொகை. இதனைப் பண்புத் தொகையாகக் கொள்வர் உரையாசிரியன்மார். எட்டடிமுதலாகப் பயின்று வருவது கொச்சக வெண்பாக்களாக உள்ளமையானும் பத்தடிமுதலாகக் கலிவெண்பா வருதலானும் அங்கதப்பாட்டினை இவ்வெண்பா அளவினொடு ஆசிரியர் மாட்டெறிந்து கூறுதலானும் ஏழடி என்றலே சால்புடையதாம்.

குறுமைக்கு அள்வு ஏழுசீரே எனப் பின் நிற்பதற்கு ஏற்ப நெடுமைக்களவு அடி ஏழே என ஆசிரியர் நயந்தோன்ற வைத்துள்ளமையை ஓர்ந்தறிக.

இனி வெண்பாவிற்கு நெடுமை குறுமை என ஓதாமல் நெடு வெண்பாட்டு, குறுவெண்பாட்டு என ஒருசார் வெண்பாக்களின் பெயர் தோன்றுமாறு ஓதினமையின் இடைவெண்பாட்டு நான்கடியான் வருமென்று கொள்க. நான்கடியான் வருவனவற்றை நேரிசை வெண்பா என்றும் அளவியல் வெண்பா என்றும் வழங்குப. மூன்றடியான் வருவன குறுவெண்பாட்டினுள் அடங்குமென அறிக.

(எ-டு) வையக மெல்லாம் கழனியா வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் தேயங்கள், செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வள்நாடு, வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள், சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாம் கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி யகம் (யா. வி. மே.)
இது பெருமைக்கெல்லையாக வந்த ஏழடி வெண்பா.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# புறத்திணைத்துறைப் பாகுபாடும் சமூகப்பின்னணியும்

**பெ. மாதையன்**
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

## சமூகப் பொது வளர்ச்சிப் போக்கு

பிரதேசங்கள் தோறும் தங்கி நிலைத்துவாழத் தலைப்பட்ட மனித சமுதாயம் ஆங்காங்கே இருந்த பௌதீக நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு தமது வாழ்வை அமைத்துக் கொண்டது. அவரவர் வாழ்ந்த நிலத்தியல்பு, அவரவர் பயன் படுத்திய உற்பத்திக்கருவிகள் ஆகியவற்றின் நிலைமைக்கேற்ப அவரவர் வாழ்வியல் நிலைமைகளும் அமைந்திருந்தன.

> "உற்பத்தி சக்திகளின் மீது மனிதன் ஆதிக்கம் பெறுவதுதான் மனிதகுல முன்னேற்றத்தின் ஊற்றுக் கண்ணாகும். இயற்கை நிலைமைகள் வரலாற்றுக் கட்டங்கள் இவற்றில் அமைந்துள்ள வேறுபாடுகள் பல்வேறுமக்களின் வளர்ச்சியிலும் பல்வேறு வர்க்கங்கள், சமூக நிறுவனங்கள் பண்பாட்டுத்துறைகள் ஆகிய வற்றின் வளர்ச்சிவேகத்திலும் வேறுபாடுகள் ஏற்படுத்து கின்றன. இதனால் வரலாறு முன்னேறுகிற பொழுது சமுதாயத்தின் ஓர் பகுதி அல்லது மற்றோர் பகுதியில் வேகமாகவோ மெதுவாகவோ வளர்ச்சி காணப்படும்" [1]

என மார்க்ஸ் எங்கெல்ஸ் குறிப்பிடுவது சமுதாயங்கள் தோறும் ஏற்பட்ட வேறுபட்ட வாழ்வியல் நிலைமைகளுக்கான காரணங் களை விளக்குகிறது. இப்பொதுவான சமுதாயவளர்ச்சிப் போக்கின் அடிப்படையில் சங்க இலக்கியங்களை ஆராய்கின்ற பொழுதுதான் திணைப்பாகுபாடுகளுக்காக அடிப்படை/உண்மைக் காரணங்களையும் உணர்ந்துகொள்ள இயலும்.

## ஒருவழிப்படா சமூக வளர்ச்சியும் வேறுபட்ட வாழ்வியல் நிலையும்

> "ஆற்றுப்படையிலுள்ள வருணனைகள், இந்நிலப் பிரிவுகள் வெறும் இலக்கியமரபு மட்டுமல்ல புவியியல் அமைப்புங்கூட, என்பதனை ஐயத்திற்கிடமின்றி நிருபிக்கின்றன. அத்துடன் இந்நிலப்பகுதிகளில்

ஒவ்வொன்றிலும் பலவிதமான நாகரீக நிலைகளில் வாழும் மக்களைக் காண்பதை நாம் முக்கியமாகப் பார்க்கவேண்டும். குன்றுகளில் வாழும் மக்கள் மிகவும் புராதனமான (நாகரீகமற்ற) நிலையிலும் மருதநிலப் பகுதியில் வாழும் மக்கள் வளர்ச்சியடைந்த நிலையிலும் காணப்படுகிறார்கள். உண்மையாகப் பார்க்கும் போது ஒரே போக்கில்லாத வளர்ச்சியைக்காட்டும் சித்திரமாக இவ்வருணணைகள் திகழ்கின்றன.''[2]

எனக் கா. சிவத்தம்பி திணைப்பாகுபாட்டிற்கான காரணங்களை ஆய்ந்து இவை ஒரு போக்கில்லா வளர்ச்சிநிலைகள் என்பதனைச் செவ்வனே விளக்கியுள்ளார்.

பத்துப்பாட்டின் ஆற்றுப்படைகள் மட்டுமல்ல எட்டுத்தொகைப் பாடல்களும் ஒருவழிப்படா வளர்ச்சி நிலைமைகளையும் நிலவியல்புக்கும் உடைமை நிலைமைகளுக்கும் உற்பத்தி, உற்பத்தி உறவுமுறைகளுக்கும் தக்கவாறு நிலவிய வேறுபட்ட வாழ்வியல் நிலைமைகளையும் தெளிவாய்க் காட்டுகின்றன.

புன்புலச்சீறூர்ச் சமூதாயங்களான குழுச் சமூதாயங்களின் வாழ்வை உணர்த்தும் பாடலொன்று 'குரவம், தளவம், குருத்து, முல்லை இவற்றைப் பூக்களாகவும் வரகு, தினை, கொள், அவரை இவற்றை உணவாகவும் துடியன், பாணன், பறையன், கடம்பன் இவர்களைக் குடிகளாகவும் காட்டுவதுடன் நெல்லுகுத்துப்பரவும் கடவுள் இல்லாது நடுகல்லையே தெய்வமாக வழிபட்டு வாழ்ந்த நிலைமையை உரைக்கின்றது.[3]

பாரியைப்பற்றிய கபிலர் பாடலொன்று குறிஞ்சி நிலத்து உணவு நிலைகளை விளக்குகின்றது.[4] உழவர் உழாது கிடைக்கும் மூங்கில் நெல், பலா, வள்ளிக்கிழங்கு, தேன் முதலியன அப்பிரதேச உணவு வகைகளாய் இருந்த நிலைகளை இப்பாடல் உரைக்கின்றது.

இவ்விருவகைச் சமுதாயங்களினின்றும் முற்றிலுமாக வேறுபட்ட நிலையில் மருதநிலச் சமுதாயங்களின் வாழ்வியல்புகள் அமைந்துள்ளன. மருதநிலங்களால் அமைந்த பொருளாதார மேம்பாடு இச்சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சிக்குப் பெருந் துணையாய் அமைந்தது. மருதநிலச் சமுதாயத் தலைவர்களான வேந்தர்களைப் பற்றிய பாடல்கள் மருதநில வாழ்வின் செழுமையைச் சிறக்கப் பாடுகின்றன.

'காட்டுக்கோழி, தினைப்புளங் காப்பவரைத் துயிலுணர்த்தக் கூவும் தன்மைத்தான காட்டிடத்தே வாழ்பவர் நினது பகைவர். நினது நாடோ வேலிப் புறத்தே நின்று வேண்டுவோர்க்கு அறமாய்க் கருதி அகத்தே வாழ்பவர் பிடுங்கி எறியும் கரும்பானது குளங்களில் உள்ள தாமரைப்பூ சிதற வீழ, அதுகூத்தரது ஆடுகளத்தை ஒத்த தன்மையாய்த் தோன்றும்.[5] பெருவளம் பொருந்தியது என மருதவளப்பெருமை பாடுகிறது ஒரு பாடல்.

நெல்லரி வினைஞர் கொண்ட வாளைமீன், உழவர் கொண்ட ஆமை, கரும்பறிவார் கொண்ட தேன், பெரிய துறைக்கண் நீரை முகந்தெடுக்க வரும் பெண்கள் பறித்தெடுத்த செங்கழுநீர் எனும் இவற்றை வன்புலத்தினின்றும் விருந்தினராய் வந்தோர்க்குக் கொடுக்கும் மென்புலத்து ஊர்களைக் கொண்ட நல்நாட்டு வேந்தே[6] எனப் பிறிதோர் பாடல் வேந்தரில் மருதநில மேன்மையைப்பாடு கின்றது.

## சமூகத் தலைமை வேறுபாடுகள்

வன்புலச் சமுதாயங்கள், குறிஞ்சிநிலச் சமுதாயங்கள், மென்புலச் சமுதாயங்கள் என்பன இவ்வாறு வேறுபட்ட வாழ்வியல் நிலைமைகளைக் கொண்டிருந்ததைப் போலவே தலைமைகளிலும் அத்தலைமைகளின் இயல்புகளிலும் வேறுபாடுகள் இருந்தன. வன்புலச் சமுதாயத் தலைவர்கள் சீறூர் மன்னர்களாகவும் குறிஞ்சிநிலத் தலைவர்கள் குறுநில மன்னர்களாகவும் மென்புலத்தலைவர்கள் வேந்தர்களாகவும் இருந்தனர். சீறூர் மன்னர்கள் உடைமை இல்லாதவராக ஊர்நலன் பொருட்டுப் போர் மேற்செல்லும் போர்க்காலத் தலைவர்களாகப் பகிர்ந்துண்டு வாழும் இயல்பினராய் உள்ளனர். குறுநில மன்னர்கள் (கடையெழு வள்ளல்கள்) தத்தமக்கெனவிருந்த குன்றையும் குன்று சார்ந்த நிலத்தையும் (ஊரையும்) கொண்டு கொடையை உயிர்ப்பண்பாய்க் கொண்டு வாழ்ந்த இயல்பினராய் உள்ளனர். மருதநில விளை வயல்களின் பெருக்கத்தை உயிர்ப்பண்பாய்க் கொண்டு வாழ்ந்த வேந்தர்கள், பெரும் வயல்களுக்கு உரிமையுடையோராய் வாழ்ந்த வேளாளரையும் பெருஞ்செல்வராய வணிகர்களையும் அரசிற்குத் தம்மை அணுக்கமுடையோராய் ஆக்கிக்கொண்ட அந்தணரையும் மதித்து வாழும் பண்பினராய் உள்ளனர். இங்கே உடைமைப் பெருக்கம் என்பதே மேலோங்கி நிற்கிறது. இவர்களோடு, மருத விளைநிலங்களுக்குச் சொந்தக்காரராய் இருந்து தம் உடைமைக்குப் பாதுகாப்பாய் மதிலும் கிடங்கும் அமைத்துக்கொண்டு வாழ்ந்த முதுகுடிமன்னர்களையும் இங்கே எண்ணிப் பார்க்கவேண்டும்.

## தலைமை வேறுபாடும் உடைமை நிலையும் போர் முறையும் (நோக்கமும்)

இந்நால்வகையோரின் உடைமை நிலைகளையும் ஊர்க் குடிகளோடு அவரவர்க்கிருந்த உறவு நிலைகளையும் இவர்கள் நடத்திய போர்களுக்கான காரணங்களையும் எண்ணிப்பார்க்கின்ற போதுதான் புறத்திணைப் பாகுபாடுகளுக்கான காரணங்களையும் நம்மால் புரிந்துகொள்ள இயலும் கா. சிவத்தம்பி குறிஞ்சி முதலான திணைப்பாகுகாடுகளுக்கு உரைத்த ஒருவழிப்படா வளர்ச்சி நிலைமைகளைத் தான் வெட்சி, கரந்தை, நொச்சி, உழிஞை முதலான புறத்திணைப் பாகுபாடுகளுக்கான அடிப்படையிலும் காணமுடிகின்றது. சமுதாயவளர்ச்சிநிலை, தலைமைஇயல்பு, உற்பத்திஉறவுமுறைகள் ஆகியவற்றுக்குத் தக்கவாறு போர்முறை களும் வேறுபட்டிருந்ததைச் சங்கப்பாடல்களும் தெளிவாய்க் காட்டுகின்றன.

சீறூர்மன்னர்களில் இருவகைப் பிரிவினர் உள்ளனர். ஒரு ஒரு பிரிவினர் கால்நடைப் பொருளாதாரத்தையும் பிறிதொரு பிரிவினர் வன்புல வேளாண்மையையும் அடிப்படையாய்க் கொண்டு வாழ்ந்தனர். கால்நடைப் பொருளாதாரத்தை அடிப்படை யாய்க் கொண்டு வாழ்ந்த இனக்குழுச் சமுதாயங்களில் போர் முறைகள் ஆநிரை கவர்தல், மீட்டல் என்பனவாகவே இருந்திருக் கின்றன. புறநானூற்றின் 257, 258, 260, 264 ஆகிய பாடல்கள் இவ்விருவகைப் (வெட்சி, கரந்தை) போர்முறை பற்றி யனவாய் உள்ளன[7] இவற்றில் 260, 261, 263, 264 ஆகியன இவ்வகைப் போர்களில் ஈடுபட்டு ஆநிரையை மீட்டும் கவர்ந்தும் தத்தம் ஊர்ப்புறத்தே நிறைத்து மாண்ட தலைவர்கள் நடுகல்லான நிலைமையைப் பாடுகின்றன.[8]

வன்புல வேளாண்மையை அடிப்படையாய்க் கொண்டு வாழ்ந்த இனக்குழுச் சமுதாயத் தலைவர்கள் தங்கள் சமுதாயத் தின் உணவுத்தேவையை நிறைவு செய்யும் நோக்கில் வேந்துவிடு தொழில்மேற் சென்றமையைப் புறப்பாடல்கள் காட்டுகின்றன. தமர் பிறர் அறியா அமர்மயங்கு அழுவத்தில் இறையும் பெயரும் தோற்றிப் போரிடுதல் (புறம். 254), களிற்றுடன் போரிடுதல் (புறம். 301, 302, 303, 308, 323), மாற்று வேந்தரை எதிர்த்தல் (புறம். 308, 322), நேரார் ஆரெயில் முற்றுதல் (புறம். 298) ஆகிய போர்நிலைகளை இப்பாடல்கள் பாடுகின்றன. வேந்துவிடு தொழில் மேற்சென்ற சீறூர் மன்னர்கள் பெருஞ்செய் நெல்லின் அரிசி (புறம். 298), வாடாத்தாமரை (புறம். 319), விழுக்கூழ்கள் (புறம். 320), பொன் செய் ஓடைகள் (புறம். 326) ஆகியவற்றைப்

பரிசிலாகப் பெற்று வருகின்றனர். இவர்கள் தங்களுக்கென நடத்திக் கொண்ட போர்பற்றிய குறிப்பேதும் இல்லை. இவர்களின் வேந்து விடுதொழில் சமுதாயநலன் என்பதை உயிர்ப்பண்பாய்க் கொண் டிருந்ததைத்தான் புறம்பாடல்கள் உரைக்கின்றன.

இவ்வினக்குழுச் சமுதாயங்களின் ஊர்கள் பருத்திவேலியை உடையனவாகவும்[9] சீறூர்த்தலைவர்களின் இல்லங்கள் செத்தைகள் நிறைந்தனவாகவும், தூசிதட்டாத முற்றத்தினை உடையன வாகவும்,[10] வெள்ளாட்டுப் பிழுக்கைகள் பரந்து கிடக்கின்ற பந்தலை உடையனவாகவும்,[11] காட்டப்படுகின்றன. இங்கே உடைமைகளையோ, உடைமைப் பாதுகாப்பிற்கென அமைக்கப்பட்ட மதில்களையோ அகழிகளையோ காண இயலாது. எனவேதான் இச்சமுதாயங்களில் நொச்சி, — உழிஞை முதலான போர்முறைகளைக் காண இயலவில்லை.

மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் மருத விளைவயல்களையும் மதிலையும் ஞாயிலையும் உடையோராய்[12] வாழ்ந்த முதுகுடி மன்னர்களின் போராட்ட வாழ்வை உரைக்கின்றன. இவர்கள்பால் மகட்கொடை வேண்டிய வேந்தர்க்கும் மகள் மறுத்த இவர்கட்கும் இடையே நடந்த போர்களெல்லாம் மருதவிளைவயல்களின் அழிவுகளையும் மதில் அழிவுகளையுமே பாடுவனவாயுள்ளன.[13] இங்கே வெட்சி, கரந்தைப் போர்களைக் காணவியலாது.

வேந்தர்களைப் பற்றிய போர்ப்பாடல்கள் பலவும் நிலக் கொள்ளை, மதில் அழிப்பு, வயல் அழிப்பு இவற்றையே மையமாகக் கொண்டனவாய் உள்ளன. பொருளாதார மேம்பாட்டிற்குத் தக்கவாறு இவர்களின் போர்முறைகளும் வேறுபட்டிருந்தன. இவர்கள் வெட்சி, கரந்தைப் போர்களில் ஈடுபட்டமைக்கோ சீறூர்மன்னர்களை அத்தகு போரின் பொருட்டு ஏவியமைக்கோ சங்க இலக்கியத்தில் சான்றுகள் இல்லை.

"கரும்பல்லது காடறியா
பெருந்தண் பணை பாழாக
ஏம நன்னா டொள்ளெரி யூட்டினை" (புறம். 16)

"கடுந்தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்
புள்ளின மிமிழும் புகழ்சால் விளைவயல்
வெள்ளுளைக் கலிமான் கவி குளம் புகளத்
தேர்வழங் கினைநின் தெவ்வர் தேஎத்துத்
துளங்கியலாற் பணை யெருத்திற்

பாவடியாற் செறனோக்கின்
ஒளிறு மருப்பிற் களிறவர
காப்புடைய கயம் படியினை'' (புறம். 15)

என இவர்களின் போர்ச்செயல்கள் எல்லாம் விளைவயல் அழித்தலாகவும் எயில் அழித்தலாகவும் நாட்டிற்குத் தீயிடுதலாகவும் நீர் நிலைகளைப் பாழ்ப்படுத்தலாகவுமே உள்ளன. சேரர்களின் இத்தகைய நிலக்கொள்ளைகளைப் பலபடப் பாடுகின்ற பதிற்றுப் பத்தின் பாடலொன்று, ஊரைத் தீயிட்டுக் கொளுத்தியபின் ஆழ்த்த அகழியையும் குறுகிய படிகளை உடைய ஞாயிலையும் கடத்தற்கரிய காவலையும் அழித்து மதிலைக் கைக்கொள்ளும் சேரனின் படைவீரர்கள் பகைநாட்டு ஆயர்களே முன்வந்து கொடுத்த ஆநிரைகளையும் மறுத்துவிடுகின்ற நன்மையை உரைக்கின்றது.[14] ஆக வேந்தர்களின் நோக்கமெல்லாம் நாடுகளைக் கைப்பற்றுதல், பகைவரைப் பணியச்செய்து அவர்பால் திறை பெறுதல்[15] என்பதாகவே உள்ளது.

இன்னாவாகப் பிறர்மண்கொளல், ஞாலங்காவலர் தோள்வலி முருக்கி ஒருதான் ஆகல் என்பனவற்றைப் போர் நோக்கங்களாய்க் கொண்ட வேந்தர்களைச் சார்ந்த புலவர்களும்.

"ஆடுகளத் துயர்கநும் வேலே தொடுவரிக்
கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி
நெடுநீர்க் கெண்டைகொடு பொறித்த
குடுமிய வாகபிறர் குன்றுகெழு நாடே'' (புறம். 58)

எனப் பிறர் குன்றுகெழுநாடும் வேந்தர்க்குரியனவாய், அவர்களின் இலச்சினைகள் பொறிக்கப்பட்ட சிகரங்களை உடையனவாதல் வேண்டும் என்றே வாழ்த்தியிருக்கின்றனர்.[16]

கால்நடைப் பொருளாதாரத்தை அடிப்படையாய்க்கொண்ட இனக்குழுச் சமுதாயங்களிடையே நிரைகவர்தல், நிரைமீட்டல் போர்முறைகளைக் காணமுடிகின்றதே அன்றி நிலத்தைக் கைப் பற்றும் நிலங்கவர் போர்களைக் காண இயலவில்லை. வேந்துவிடு தொழில் மேற்சென்ற வன்புலச்சமுதாயத் தலைவர்களும் நிலங்கவர் போர்களில் ஈடுபட்டமைக்குச் சான்றேதும் இல்லை. "வீரயுகப் பாடல்களாகக் கொள்ளத்தகும் புறப்பாடல்கள் பலவும் 'மாடுபிடி' சண்டையை மையமாகக் கொண்டவை ... அக்காலத்திலே செல்வப் பொருளாக மாடு அமைந்த காரணத்தினாலேயே அது சமுதாயத்திலே போருக்குக் காலாயமைந்தது. பசுவைக் கவருவோரும் கவருவோரைத் தடுக்க முனைவோரும் முக்கமான போரில் ஈடுபட்டனர்''[17] எனக் கைலாசபதி கூறுவதை இங்கே எண்ணிப்பார்க்க வேண்டும். (தொடர்ச்சி அடுத்த இதழில்)

## தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

### தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1. Tamil Literature — உரூ. 85/—
   — Prof. M. S. Purnalingam Pillai — U. S. $ 17

2. மொழி நூல்
   — மாகறல் கார்த்திகேய முதலியார் — உரூ. 75/—

3. Tamil University Machine Translation System (TUMTS) — Rs. 75/— U. S. $ 15
   Co-authors : K. C. Chellamuthu K. Rangan
   K. Murugesan

4. A Study on the Thanjavur Art Plate — Rs. 60/—
   — Prof. P. Saravanavel — U. S. $ 12

5. நாமதீப நிகண்டு — உரூ. 68/—
   — கல்லிடைநகர் சிவசுப்பிரமணியக் கவிராயர்

6. மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் — உரூ. 45/—
   — பேரா. கா. சுப்ரமணியப் பிள்ளை

7. Indians in South Africa — Rs. 60/—
   — Prof. K. Nambi Arooran — U. S. $ 12

விற்பனைக் கழிவு : அஞ்சல் வழி 25%
நேரில் 30%
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%
விற்பனையாளர்களுக்குப் பெறும்படி
களுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

# கரந்தைத் தமிழ்ச் சங்கவெளியீடுகள்

யாழ் நூல் — விபுலானந்த அடிகள் ரூ. 50 00

கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்) ரூ. 30 00

கட்டுரைப் பூங்கா
(தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார்
நூற்றாண்டு நினைவு வெளியீடு) ரூ. 60 00

இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது
ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ் ரூ. 6 00

கபிலர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் ரூ. 4 00

நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் ரூ. 3 00

மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில்
அஞ்ஞானத்தின் வழக்கீடு –
பா. வே. மாணிக்க நாயக்கர் ரூ. 2 00

கவியரசு நினைவு மலர் ரூ. 1 00

தமிழரசி குறவஞ்சி ரூ. 0 62

சிவமும் செந்தமிழும்–பாவலர் ச. பாலசுந்தரம் ரூ. 0 25

பிற வெளியீடுகள் :

கரந்தைக் கோவை (அகப்பொருட் கோவை நூல்)
பேராசிரியர் ச. பாலசுந்தரம் 4 50

கலைக்கூத்தன் கவிதைகள் ரூ. 6 00

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும். அஞ்சற் செலவு தனி.
நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613002.

# பதிப்பாசிரியர் குழு


திரு. ச. **இராமநாதன்,**

தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர் **க. வெள்ளைவாரணன்,**

142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி **சு. செல்லப்பன்,** எம். ஏ., பி. டி., பி. எல்.,

இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை.

டாக்டர் **தமிழண்ணல்,** எம். ஏ., பிஎச். டி.,

தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

டாக்டர் **சி. பாலசுப்பிரமணியன்,** எம்.ஏ., எம்.லிட், பிஎச்.டி.

தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் **பி. விருத்தாசலம்,** எம். ஏ.,

முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2,

பேராசிரியர் **சி. கோவிந்தராசன்,**

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் **ஆ. பாலன்,** எம். ஏ., எம். ஃபில்.,

துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

புலவர் **மீனா. இராமதாசு,** எம். ஏ.,

தலைமைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2

திரு. **பா. மதிவாணன்,** எம். ஏ., எம். ஃபில்.,

துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

**பதிப்பாசிரியர்**

பேராசிரியர் **ச. பாலசுந்தரம்**

Regd. No. TN/TB/24.

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு

7. ஆசிரியர்,
தஞ்சை சரபோசி மன்னர் சரஸ்வதி
மகால் நூல் நிலைய இதழ்,
அரண்மனை,
தஞ்சாவூர்.

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

## தமிழ்ப் பொழில் கட்டணம்

| | | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 2 50 | 3 00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 30 00 | 60 00 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. | 250 00 | 600 00 |

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.